AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 23

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## விநாயகர் சதுர்த்தி திருநாள்!

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான்! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai



சத்வித்யா வாசகர்களே! நமது இதழின் ஆன்மீக மலர்களை எண்ணத்தில் ஏற்றி மணக்க வைக்கும் நன்னெஞ்சங்களே! இறைவனின் இருப்பையும் அவர்தம் ஆற்றலையும் அறிவதோடு, சனாதன தர்மம் உரைக்கின்ற தத்துவங்களை உங்களுக்கு நினைவூட்டும் சேவையை செய்து வருகிறது சத்வித்யா இதழ்!
சில தவிர்க்க முடியாத காரணங்களால் கடந்த இரண்டு மாதங்களாக மாத இதழாக மலர்கிறது. மாதம் இருமுறை வெளிவந்த நமது சத்வித்யா, மாத இதழாக மாறியதன் காரணம், இன்னும் நிறைய ஆன்மீக செய்திகளையும் அற்புத இறை சிந்தனைகளையும் தாங்கி, அதிக பக்கங்கள், அபூர்வ செய்திகளோடு உங்கள் கைகளில் தவழவிடுகிறோம்! என்றும் போல் உங்கள் ஆதரவினை நல்கி, இதயத்தில் ஏற்றி வையுங்கள்!
இந்த மாதம் முழுமுதற் கடவுளான கணபதியின் சதுர்த்தியிலிருந்து பக்தி விழாக்கள் அணிவகுத்து வரவிருக்கின்றன. இந்த சதுர்த்தியிலிருந்து சங்கடங்கள் அகன்று இயல்பான வாழ்க்கையை உலக மாந்தர் வாழ, எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டுவோம்!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

AstroVed

# சத்வித்யா

பக்கங்கள்


விநாயகர் சதுர்த்தி திருநாள் --------- 1

காமேஸ்வரி எந்திரம் ---------5

சுகவாழ்வு தரும் ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி --------- 6

சில வைணவ துளிகள் --------- 8

பெரும் செல்வம் பெற... ---------10

மனித மனம் ---------11

ஆன்மீக கெள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும் ---------13

நாகர்கோயிலில் தரிசிக்க வேண்டிய திருத்தலங்கள் ---------15

முலிகை ரகசியம் ---------17

சிவனருள் சித்திக்கும் சைவப் பெருநேறி ---------18

திருநாளைப்போவார் (நந்தனார்) ---------20

எம்மை தீண்டாதீர் ---------24

சித்தர் பூமி ---------28

இந்த பிள்ளை யார்? ---------31

பொங்கு சனீஸ்வரர் ---------33

செப்டம்பர் - ராசி பலன் - 2021 ---------35




~ கீதாமணி

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனி நு டங்காது
பூக்கொண்டு
துப்பார் திரு மேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

என்னும் பாடல் பெற்ற விநாயகர் குறித்து காஞ்சி மகான் மகாப் பெரியவர் அவர்கள் இப்படி அருளியுள்ளார்கள்.

"சிவபிரானின் இளைய பிள்ளையை தமிழ்த் தெய்வம் என்று குறிப்பாகச் சொல்ல எவ்வளவு காரணமுண்டோ அவ்வளவு, ஒரு வேளை அதை விடக் கூட ஜாஸ்தியாகவே - அண்ணாக்காரரான அந்த கணபதியையும் சொல்வதற்கு இருப்பதாகவே எனக்கு தோன்றுகிறது் அதனால் அந்த அண்ணா, தம்பிகளைப் பிரிக்கவே படாது சேர்த்து சேர்த்தே சொல்லணும், நினைக்கணும், பூஜை பண்ணனும் என்பதாலேயும் - பிள்ளையார், சுப்ரமணியர் இரண்டு பேரையுமே தமிழ்த் தெய்வங்கள் என்று வைத்து விட வேண்டும்" என இந்த நம் நாட்டு கணபதியை முதன் முதலாக வடக்கேயிருந்து தென்னாட்டுக்கு வாதாபியிலிருந்து கொண்டு வந்தவர்கள் பல்லவர்களே என்று சரித்திர வாயிலாக அறிய முடிகிறது.

இவ்வுலகில் முதன் முதலில் எழுத்தைக் கண்டு பிடித்து வரி வடிவம் அளித்த முதல்வராக சிறக்கிறார் விநாயகப்பெருமான். எனவே தான் நாம் நன்றி நவிலும் முறையில், முதலில் "உ" என்று எழுதி, தடையேதுமில்லாமல் நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் முடிவுற மானசீக இந்த வழிபாட்டை மேற்கொள்ளும் மரபு உள்ளது.
"உ" இது பிரணவத்தின் இரண்டாம் (நடு) எழுத்து.
அ-உ-ம என்பதே "ஓம்காரமான பிரணவமாகும்"
அ - சிருஷ்டி - பிரம்மா
உ - பரிபாலணம் - விஷ்ணு
ம - ஸம்ஹாரம் - ஈசுவரன்

### "உ" எதைக் குறிக்கிறது!

அது சிவசக்தியின் மூத்தவனான கணபதியை மகா விஷ்ணுவோடும், தொடர்புபடுத்தி சைவ - வைணவத்தில் இணைந்த வழிபாடு என்பதைக் காட்டுகிறது. பிரணவத்தின் திரிந்த வடிவே "உ" ஆகும்.

விநாயக சதுர்த்தியின் தோற்றம் குறித்து வெவ்வேறு சம்பவங்கள் புராணத்தில் கூறப்பட்டுள்ளன. அதில் இடம் பெற்ற ஒரு சம்பவமே இது.

ஒரு நாள் கைலாயத்தில் பிள்ளையார் ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருந்தார். அச்சமயம் தரிசனத்துக்கு அங்கு வந்த நவக்கிரக சந்திரன், தொந்தியும், தொப்பையுமாய் உள்ள பிள்ளையாரின் ஆட்டத்தைக் கண்டு தன்னை மறந்து "பக்" கென சிரித்து விட்டார். இதன் விளைவாக பிள்ளையார் சினமுற்று "உன் இயல்பான கலையை இழக்கக் கடவது" என சந்திரனை சபித்து விட்டார். இதனால் கலங்கிப் போன சந்திரன் பிள்ளையாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினார்.

பின்பு சந்திரன் பால் இரக்கமடைந்த பிள்ளையார் "சந்திரா! சுக்லபட்ச சதுர்த்தி திதியில் உன்னைக் காண்போர் எல்லாம் வீணான விளைவுகளுக்கு உட்படுவார்கள். ஆனால் அத்தகையவர்கள் ஆவணி மாத சுக்லபட்ச சதுர்த்தி திதியில் என்னை பூஜித்து வணங்கினால், அவர்கள் பெற்ற

வீண் அபவாதங்கள், கஷ்டங்கள் விலகப் பெற்று நன்மைகள் அடைவர்" என்று அருளினார். இதனால் தான் ஆவணித் திங்கள் வளர்பிறை சதுர்த்தியில் சந்திரனுக்கு நேரும் நான்காம் பிறையை காணாது தவிர்த்து வருகிறோம்

புராணத்தில் காணப் பெறும் இந்த வேறொரு சம்பவத்தையும் அறியலாம்.

சிவபிரானைக் குறித்து அரக்கன் கஜமுகாசுரன் என்பவன் கடும் தவம் செய்து இப்படி ஒரு வரத்தைப் பெற்றான். மனிதர்கள், விலங்குகள் மற்றும் எந்த வித ஆயுதத்தாலும் தன்னை யாரும் வெல்லக் கூடாது என இதன் காரணமாக மண்டை கர்வம் பிடித்து தேவர்கள், முனிவர்கள், ஜனங்கள் என பல பேர்களுக்கு அவன் துன்பங்கள் தர ஆரம்பித்தான்.

கலக்கமுற்ற தேவர்கள் உள்ளிட்ட முனிவர்கள் கயிலாயம் சென்று கஜமுகாசுரனின் கொடுமைகளை சிவனிடம் எடுத்துச் சொல்லி முறையிட்டனர். அப்பொழுது சிவபிரான் விநாயகரை யானை முகத்தோடும், மனித உடலோடும் படைத்து கஜமுகாசுரனை அழிக்கும் பணியை ஒப்படைத்தார். அந்த கஜமுக தோற்றமானது அவதாரமானது "ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி புண்ணிய தினத்தில் தான்

கஜபதியான பிள்ளையார் கஜமுகாசுரன் இருக்கும் இடம் சென்று, அவனுடன் கடும் போரிட்டு, அவனை அழிக்க, தனது முக தந்தங்களில் ஒன்றினை ஒடித்து ஏவி விட்டார். ஆனால் அசுரனோ சிறிய மூஞ்சூறு வடிவமெடுத்து பிள்ளையாரைத் தாக்கினான். அச்செயலால் கோபமுற்ற அவர் கஜமுகாசுரனின் ஆணவத்தை அழித்து அவனை வென்று, அவனையே தனது மூஞ்சூறு வாகனமாக்கி கொண்டார். அந்நாளைத்தான் நாம் விநாயக சதுர்த்தி தினமாகக் கொண்டாடி வருகிறோம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இப்படி கஜமுகாசுரனை அடக்கியது போலவே, விநாயகர் விரசனய அசுரன், கிருத்திராசுரன், உதத்தன், துந்தரன், நக்கிராசுரன், நூபுரசுரன், அனலாசுரன் மற்றும் இராவணனையும் வென்று அடக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பிள்ளையாரை துதித்து பலன் பெற்ற தேவர்கள் இவர்கள்.

ஒரு சமயம் மகா விஷ்ணு அத்திகிரி விநாயகரை வழிபட்டு பாஞ்சசன்யம், சங்கு இவற்றைப் பெற்றதோடு தான் ஒரு சந்தர்ப்பத்தில் இழந்து விட்ட ஸ்ரீ சக்கரத்தையும் மீண்டும் அடைந்துள்ளார்.

தனது இளவல் சுப்பிரமணியர் வள்ளியை மணமுடிக்கக் காரணமான பிள்ளையார் அவர் மயில்வாகனம் பெறவும் அருளியுள்ளார்.

தேவேந்திரன் ஒரு நேரத்தில் இழந்து விட்ட இந்திர பதவியை மறுபடியும் அடைய உதவியதும் பிள்ளையார்தான்.

இப்படி பல விதத்தில் கஜேந்திர கடாட்சம் வானுலகத்தேவர்கள் பலருக்கு கிட்டியுள்ளதை புராணங்கள் மூலம் அறிய முடிகிறது.

அனைத்து புராண நூல்களிலும், புலவர்கள் படைத்த காவிய, கவிதை நூல்களிலும், மற்றும் பல நூல்களிலும் பிள்ளையார் வணக்கமே முதலிடம் பெற்று, இன்றும் அந்த மரபு தொடர்கிறது.

கணபதி என்ற சிறப்பு பெயரையும் கொண்டுள்ளார், விக்னேசுவரர். இதில் " க" என்பது ஞானத்தையும், "ண" என்பது ஜீவன்களின் மோட்சத்தையும், " பதி" என்பது தலைமையையும் குறிக்கும்.

ஞானம், மோட்சம் ஆகிய இவற்றுக்கு தலைவனாய் பரப்பிரம்ம சொரூபமாக இருப்பவரே "கணபதி".

இந்தக் கணபதிக்குத்தான் இப்படி எத்தனை எத்தனை பெயர்கள்

லட்சுமி கணபதி, ருணவாரண கணபதி, மகா வித்யா கணபதி, ஹரித்ரா கணபதி, வக்ரதுண்ட கணபதி, நிதி கணபதி, புஷ்டி கணபதி, பாலகணபதி, சக்தி கணபதி, ஹேரம்ப கணபதி, ஸந்தான லட்சுமி கணபதி, விஜய கணபதி, ஸங்கடஹர கணபதி, துர்கா கணபதி, நவ நிதி கணபதி என பட்டியல் இன்னும் நீளும்.


விக்னேசுவரராகிய கணபதி மிக மிக எளிமையானவர். நாம் எண்ணிய காரியத்தை, அது நல்லபடியாக முடிந்து விட்டால் தேங்காயை

தரையில் அடித்துச் சிதற விட வேண்டிக் கொண்டாலே போதுமானது. விரைவில் அதனைசாதகமாக முடித்துவிடுவார் அந்த கணபதி

"ஓம் தத்புருஷாய வித் மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தந்தோ தந்தி பிரசோத்யாத்"

என்ற மூல காயத்ரி மந்திரத்தைக் கொண்ட விநாயக சதுர்த்தி விழா இந்த ப்லவ ஆண்டு ஆவணி மாத, 25 ஆம் தேதி ( ஆங்கில தேதி- 10.09.2021) வளர்பிறை சதுர்த்தி தினத்தில் உலகெங்கும் கொண்டாடப்பட உள்ளது.

அத்தினத்தில் வீட்டையும், பூஜை அறையை சுத்தம் செய்து அதிகாலையில் எழுந்து, குளித்து, சுத்த உடை அணிந்து வீட்டு வாயிலில் மாவிலைத் தோரணம் கட்டி, வீட்டு வாசலில் அழகிய கோலமிட்டு விழாத் துவக்கம் செய்வது வழக்கமாக உள்ளது.



விநாயக சதுர்த்தி தினத்தில் களிமண்ணால் உருவான பிள்ளையார் திரு உரு ஏராளமாக விற்பனையாகும்.

பிள்ளையார் பூஜைக்கென்றே பலவித உதிரி மலர்களும் நிறைய கிடைக்கும்.

விநாயகருக்கு மிக இஷ்டமானது அருகம்புல்லும், எருக்கம் பூவும் ஆகும். பூஜையின் போது அவைகளை மாலையாகப் போட்டு அவரை அலங்கரித்து உட்கார வைக்க வேண்டும். சிலர் குல மரபுப்படி அந்த உருவுக்கு பூணூல் அணிவிப்பதும் உண்டு.

சந்தனம், குங்குமம் இட்டு பிள்ளையாரை அலங்கரித்து முறைப்படி அவருக்குரிய அஷ்டோத்திர நாமா வளியை உச்சரித்து, அருகு, வன்னி, செண்பக, மந்தாரை உள்ளிட்ட உதிரி புஷ்பங்கள் மஞ்சளால் கலக்கப்பட்ட அட்சதை சேர்த்து பயபக்தியுடன் அர்ச்சிக்க வேண்டும்.

விநாயகருக்குப் பிடித்த உப்பு, வெல்லக் கொழுக்கட்டை, அப்பம், அவல், பொ ரி, எள் உருண்டை, பயறு வகைகள், வடை, சுண்டல் இவற்றுடன் வாழைப்பழம், நாவல் பழம், விளாம்பழம் உள்ளிட்ட பலகனி வகைகளுடன் அத்தட்டில் தேங்காய், வெற்றிலை, பாக்கு இவைகளை நைவேத்தியமாக்கி விட வேண்டும்.

அர்ச்சனை முடித்து, தேங்காயை உடைத்து, சாம்பிராணி போட்டு, எல்லாவற்றையும், பூஜை மணி அடித்து நைவேத்தியம் செய்து, கடைசியாக இறைவனுக்கு தூப, கற்பூர தீப வழிபாடு செய்ய, விநாயகர் பூஜை பூர்த்தியாகும்.

விநாயகர் சதுர்த்தி புண்ணிய நாளில் அவரை வழிபடுவோர்க்கு, திருமணத்திற்காகவும், மகப்பேறுக்கும் காத்திருப்பவர்களுக்கு அருளுவதுடன், பிள்ளையார் கல்வி, செல்வ உயர்வு, ஆரோக்கிய வாழ்வு போன்ற பலவற்றையும் வழங்குவார்

விநாயக சதுர்த்தி தினத்திற்கு அடுத்த நாள், அவருடைய திரு உருவுக்கு புனர் பூஜை செய்து, பின்பு அதனை அருகில் உள்ள கிணறு, நதி அல்லது குளங்களில் சமர்ப்பித்து விட வேண்டும். அப்பொழுதுதான் சதுர்த்தி தின விழா முடிவடையும்.

இது பொதுவான பூஜை முறை. ஆனால் அவரவர் குடும்பங்களில் வழி வழியாக கடைப்பிடித்து வரும் பூஜை முறைகளை பின்பற்றுவதுதான் சரியாகவிருக்கும்.

தான் கொண்ட உருவத்தால் தேவர், பூதம், ஆண், பெண், அஃறிணை உயர்திணை என எல்லாமுமான பிள்ளையாரை தோப்புக்கரண முறை வழிபாடு செய்தால், அவர் ஆனந்தப்பட்டு பல நோய்கள் வராமல் தடுப்பதோடு ஆரோக்கிய மன நிலை, வாழ்வு இவற்றை அருள்வார் என்பது தொன்றுதொட்ட மக்கள் நம்பிக்கை.

விஞ்ஞான முறையில், நம்தலையில் உள்ள முக்கிய நரம்புகள் வலுப்பெற்று தோப்புக்கரண மிட நினைவாற்றல் கூடி வரும் என்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

அரசமரம், ஆலமரம், வேப்பமரம், வன்னி மரம், நெல்லி மரம், என பல மரத்தடிகளில் எழுந்தருளியுள்ள மரத்தடி பிள்ளையாரை வணங்கி வழிபட்டால் பல நற்பேறுகள் கிட்டும் என நம் முன்னோர்கள் வழிகாட்டி யுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

விநாயக சதுர்த்தி நாள் தவிர மாத சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, அங்காரக சதுர்த்தி, குமார சஷ்டி போன்ற புண்ணிய நாட்களில் கடைப்பிடிக்கும் விரத முறைகளும் நமது நடைமுறையில் உள்ளது!

இந்தப் புண்ணிய விநாயக சதுர்த்தி தினத்தில் உலகையே புரட்டிப் போட்டு வரும் கொடிய தொற்று நோய் அறவே அழிய வேண்டும் என்பதையும், நமது விநாயகப் பிரார்த்தனையில் சேர்த்துக்கொண்டு பிள்ளையார் பூஜையை நிறைவு செய்வோம்!

## செல்வ வளம், சந்தோஷமான வாழ்வை அமைத்து கொடுக்கும்

# காமேஸ்வரி எந்திரம்

செல்வ வளம், சந்தோஷமான வாழ்வை அமைத்து கொடுக்கும் காமேஸ்வரி எந்திரம்
திருமணம், வீடு, வாகனம், நிலம், சொத்து, களத்திரத்துடன் அன்யோன்ய தாம்பத்தியம் போன்ற இல்லுலக சுகங்கள் எல்லாமே காமம் என்று அழைகப்படுகிறது. இத்தகைய இன்பங்களை குறைவில்லாமல் அளித்து சந்தோசமான வாழ்வை அனுபவிக்க செய்யும் வலிமை காமேஸ்வரி அன்னைக்கு உண்டு. வளர்பிறை திதி பதினைந்து, தேய்பிறை திதி பதினைந்து ஆக மொத்தம் முப்பது திதிகளிளேயே முதன்மை திதியான பிரதமை திதியின் தேவதை இந்த காமேஸ்வரி அன்னை ஆகும். காமேஸ்வரி அன்னைக்கு உரிய எந்திரத்தை வீட்டின் வடக்கு அல்லது கிழக்கு அல்லது வடகிழக்கு மூலையில் புனிதமான பூஜை அறையில் வைத்து தினமும் பூஜை செய்து வந்தால் தன நிலையில் ஏற்றத்தை கொடுத்து, நிலம், வீடு, வண்டி, வாகனம், தங்கம், ரத்தினம் போன்ற செல்வ வளங்கள் மற்றும் சந்தோஷமான தாம்பத்திய வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுக்ககூடியது.



இந்த காமேஸ்வரி எந்திரத்தை பூஜை அறையில் வைத்து சந்தன குங்குமம் வைத்து, தூப தீப ஆராதனை காட்டி கிழே கொடுக்கப்பட்டுள்ள மந்திரத்தை 108 முறை தினமும் உச்சரித்து வந்தால் குடும்பத்தில் சந்தோசத்தையும், பொன் பொருள் சேர்க்கையும், நிறைவான தாம்பத்திய வாழ்க்கையையும் ஏற்படுத்தி கொடுக்கும். சுக்கிலபட்ச பிரதமை திதியிலிருந்து இந்த காமேஸ்வரி எந்திர வழிபாட்டை தொடங்கலாம்.

**காமேஸ்வரி எந்திரத்திற்குறிய மந்திரம்:**
"ஓம் காமேஸ்வர்யை வித்மஹே
நித்யக்லின்னாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்"

# சுகவாழ்வு தரும் ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி!!

~ திருவாரூர் சு. சேகர்

தேவி வழிபாடு, பக்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. தேவியை உபாஸித்து வந்தால், சர்வ பலத்துடன் மனோபலமும் கிடைக்கப் பெறலாம் என்றும் இல்லத்தின் அனைத்து வளங்களும் நம்மை வந்தடையும் என்பதும் ஐதீகம்.

### புராணங்களில் ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி:

மும்மூர்த்திகளின் தேவிகளான பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி போன்ற மூவரும் ஒன்று சேர்ந்து தமது சக்திகளை உள்ளடக்கிய வடிவமே ஸ்ரீ பிரத்தியங்கிரா என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி நான்கு சிங்கங்கள் பூட்டிய ரதத்தில் சிம்ம முகத்தோடும், எட்டு கைகளோடும், மிகக் கோபமான பார்வையோடும், உக்கிரமான வேகத்தோடும் காணப்படுகிறார்.
ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி, உக்கிர சக்தி படைத்தவர் என்பதால், சூரியனை கண்டு இருள் விலகுவது போல், தன் பக்தர்களின் பிரச்சினைகள் என்கிற இருளை விலக்கி அவர்களுக்கு சகல நலங்களை அள்ளித் தருவார். எந்த விதமான பயம் ஏற்பட்டாலும் இவர் நாமத்தை சொன்னாலே நிவாரணம் கிடைத்துவிடும்.

### ஸ்ரீ பிரத்யங்கராதேவியின் தோற்றம்:

பிரகலாதனை கொடுமைப் படுத்திக்கொண்டு இருந்த ஹிரண்யகசிபுவை அழிக்க மகா விஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்தார்.
ஹிரண்யகசிபு பெற்ற வரத்தினால் அவனை மனிதர்களோ, மிருகங்களோ அல்லது வேறு ஆயுதங்களினாலோ கொல்ல முடியாது. அவனுடைய இரத்தம் கீழே சிந்தினால் அதில் இருந்து மீண்டும் அவன் வெளிவருவான். எனவே மனிதரும் அல்லாமல், மிருகமும் அல்லாத சிங்க தலைக் கொண்ட ஒரு பயங்கர உருவாக அவதாரம் எடுத்த நரசிம்மர் ஒரு தூணில் இருந்து வெளி வந்து, ஹிரண்யகசிபுவை தன் தொடை மீது பிடித்து வைத்துக் கொண்டு அவன் உடலை தன் விரல் நகத்தினால் கீறி அவன் உடலில் இருந்து வெளி வந்த ரத்தத்தைக் குடித்து அவனை வதம் செய்தார்.

ஹிரண்யகசிபுவை அழித்த பின் நரசிம்மரின் இரத்த வெறி அடங்காமல், மூவுலகையும் அழிக்கத் துவங்க தேவர்கள் சரேபஸ்வரர் உருவில் இருந்த சிவபெருமானிடம் அடைக்கலம் ஆயினர். சிவபெருமானும் தனது மூன்றாவது கண்ணில் (சரேபஸ்வரர் நெற்றியில் இருந்து) இருந்து பிரத்தியங்கர தேவியை வெளிப்படுத்தினார்.



அவர் ஆயிரத்தி எட்டு சிங்கத்தின், இரண்டாயிரத்து பதினாறு கண்கள், அதைத் தவிர மூன்றாவது கண், இரண்டாயிரம் கைகள், அந்தக் கைகளில் இருந்த விரல்களில் புலியின் நகங்கள், யமனைப் போன்ற கரிய நிறம், நீல ஆடை, சரீரமோ யானையை விட பத்து மடங்கு பெரிய விஸ்வரூப தோற்றத்துடன் வெளி வந்தார். இவரின்

உதவியுடன் தான் நரசிம்மரின் உக்கிரத்தை அடக்கியதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

### அய்யாவாடி ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி கோயில்:

தமிழகத்தில் ஸ்ரீ பிரத்தியங்கிராதேவிக்கு என கோயில்கள் குறைவுதான். சில கோயில்களில் இவருக்கு தனி சந்நிதி அமைந்திருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் திருநாகேஸ்வரம் அருகில் உள்ள அய்யாவாடி அருகில், பிரத்தியங்கிராதேவிக்கு என தனி கோயில் உள்ளது. கும்பகோணத்தில் இருந்து தென்கிழக்கே 8 கி.மீ. தொலைவில் அய்யாவாடி என்னுமிடத்தில், உப்பிலியப்பன் கோயிலிலிருந்து நாச்சியார்கோயில் செல்லும்வழியில் இக்கோயில் உள்ளது.

இங்குக் கோயில் கொண்டுள்ள தேவி சிம்ம முகத்தோடும் பதினெட்டு திருக்கரங்களோடும் நான்கு சிம்மம் பூட்டிய ரதத்தில் இலட்சுமி சரஸ்வதியோடு காட்சி தருகிறாள்.

பஞ்சபாண்டவர்கள் வழிபட்டதால், இந்தத் தலத்துக்கு ஐவர்பாடி என்ற பெயர் ஏற்பட்டது. இப்போது அய்யாவாடி என்று அழைக்கப்படுகிறது. துவாபார யுகத்தில் விதி வசத்தால் பஞ்சபாண்டவர்கள் சொத்துகளை இழந்து வனவாசம் இருந்த காலத்தில் இங்கு வந்து, இந்தத் திருத்தலத்தில் உள்ள பிரத்தியங்கிரா தேவியை தவமிருந்து வழிபட்டதாக கூறப்படுகின்றது. ஸ்ரீராமர் லட்சுமணர் ஆகியோர் பூஜித்த ஸ்தலம். இராவணன் மகன் இந்திரஜித் இங்கு நிகும்பலா யாகம் செய்துள்ளார். பதினெட்டு சித்தர்கள் இங்கு வந்து வழிபட்டுள்ளனர். அகத்தியருக்கு பிரத்தியங்கிரா தேவி காட்சி தந்த ஸ்தலம்.

அய்யாவாடி திருத்தலத்தில் அமாவாசை தோறும் நிகும்பலா யாகம் நடக்கிறது. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் சிறப்பு ஆராதனைகள் பிரத்தியங்கிரா தேவிக்கு விமரிசையாக நடைபெறுகின்றது.

### நிகும்பலா யாகம்:

நிகும்பலா யாகம் என்பது பிரத்யங்கிரா தேவிக்கு செய்யப்படும் பிரத்தியேக யாகம் ஆகும். இந்த யாகத்தில் மிளகாய் வற்றல் ஆகுதியாக கொடுக்கப்படுகிறது. நிகும்பலா யாகத்தில் மூட்டை மூட்டையாக போடப்படும் மிளகாய் வற்றலிலிருந்து சிறிது நெடி கூட வராது என்பது இன்றும் நிகழும் அதிசயம். நிகும்பலா யாகத்தில் கலந்து கொண்டால் இழந்த பதவி மீண்டும் கிடைக்கும், எதிரிகளின் தொல்லை விலகும், கடன் தொல்லை தீரும், உத்தியோக உயர்வு கிடைக்கும், புதிய வேலை வாய்ப்பு உருவாகும், திருமணம் விரைவில் நடக்கும், வியாபாரம் செழிக்கும் என்பது ஐதீகம்.

### ஸ்ரீ பிரத்யங்கராதேவியின் மூல மந்திரம்:

ஓம் க்ஷம் பக்ஷ ஜ்வாலா ஜிஹ்வே கராள
தம்ஷ்ட்ரே ப்ரத்யங்கேர க்ஷம் ஹ்ரீம் ஹூம் பட்

### ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி காயத்ரி மந்திரம்:

ஓம் அபராஜீதாய வித்மேஹ
பிரத்யங்கிராய தீமஹி
தந்நோ உக்ர ப்ரசோதயாத்

### வழிபாட்டு பலன்கள்:

அய்யாவாடி திருத்தலத்திற்கு வந்து ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவியைவணங்கினால் பூர்வ ஜென்ம பாபங்கள் தீர்க்கப்படும், ஏவல், பில்லி, சூனியம் போன்றவை விலகும், நியாயமான கோரிக்கைகள் நிறைவேறி எல்லா துன்பங்களும் நீங்கும், தீராத நோய்கள் குணமடையும். செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை முதலான நாட்களிலும் அமாவாசை, பௌர்ணமி முதலான நாட்களிலும் ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவியை வழிபாடு செய்வதை சிறப்பாகக் கருதுகின்றனர்.

எந்த நாளும் சுக வாழ்வு தரும் ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவியின் காயத்ரி மந்திரத்தைச் சொல்லி பாராயணம் செய்து வழிபடுவோம்.

ஓம்சக்தி... பராசக்தி...

# சில வைணவ துளிகள்

~ கீதாமணி

வைணவர்கள் போற்றி வணங்கும் ஸ்ரீ மந் நாராயணன் கொண்ட முக்கிய திரு நாமங்களாக இவை உள்ளன.

அவை கேசவன், நாராயணன், கோவிந்தன், மாதவன், மது சூதனன், திரு விக்ரமன், வாமனன், ஸ்ரீ தரன், ரிஷி கேசன், பத்மநாபன், தாமோதரன், வாசு தேவன், என்ற பனிரெண்டாகும்.

ஆழ்வார்களால் பாடல்கள் பெற்ற பெருமாள் 108 முக்கிய திவ்விய தேசங்களில் உள்ள ஆலயங்களில் குடி கொண்டுள்ள சிறப்பினைக் கொண்டுள்ளார்.

இந்த தெய்வத்தை 108 திருநாமங்களாகிய சகஸ்ர நாமங்களாலும் பூஜித்து வணங்கி பக்தர்கள் பேறு பெறுகிறார்கள்.
பகவானை சமயச் சார்பு முறையில் வசிஷ்டாத் வைதம் என்பதைச் சார்ந்து வைணவர்கள் வழிபாடு செய்கிறார்கள்.

விசிஷ்டஸ்ய - நுண்மாண் இவற்றிடை அத்வைதம் - இரண்டில்லாமை
உடல் உயிர்ப்பொருள்களை சரீரமாகக் கொண்ட ஈசுவரன் ஒருவனே எனவே ஈசுவரனையும், சரீரத்தையும் இரண்டாக வேறு படுத்தாமல், அந்த ஈசுவரனும் அவனுக்குச் சரீரமாக உள்ள ஆன்மாவும் இணை பிரியாதவை மற்றும் அவை நித்யமாய் இருக்கும் என்பதை உணர்த்துவதே வசிஷ்டாத் வைதம்.
இதர சமயச் சார்பு உடையவைகளே துவைதம் மற்றும் அத்வைதம் ஆகியவைகள்.
வைணவம் கொண்ட மூன்று கூறுகள் என்னென்ன?

தத்துவம் - ஸ்ரீ மந் நாராயணனே தத்துவமான உண்மை.

இதம் - ”அந்த பரந்தாமன் திருவடிகளை சரண் புகுந்து பற்றுவதே நன்மையாகும்..

புருஷார்த்தம் - அந்த இறைவனையே நினைத்து அவனுக்கே அடிமை செய்திருப்பதே இனிமை.
அறிவுள்ள உயிராகிய சித்து, அறிவற்ற உடலாகிய அசித்து, அனைத்தையும் தாங்கி ஏவி இயக்கும் இறைவன் என்ற மூன்று தத்துவங்களை உள்ளடக்கியதே வைணவ மதமாகும்.
இப்படி ஐந்து நிலைகள் கொண்டு விளங்குவார் அந்த இறைவன்.

பரம் ......................
ஸ்ரீ தேவி, நீளா தேவியரோடு எப்பொழுதும் தன்னை விட்டுப் பிரியாத அனந்தன், கருடன், சேனை முதல்வர் ஆகியோரோடு இன்முகம் காட்டி வாழ்வருளும் பரமபதம்.

வியூகம் ......................
தேவர்களின் குறைகளைப் போக்கவும், மண் மிசை யோனிகள் தோறும் தன்னைத் தாழ் விட்டுப் பிறப்பதற்கும் பாங்காய் தான் பள்ளிக் கொண்டிருக்கும் பரமனின் திருப்பாற்கடல்.

விபவம் ......................
நல்லவர்களைக் காத்தும், அவர்களுக்கு இடையூறு அளிப்பவர்களை அழித்தும்தர்மத்தை நிலை நாட்டும் பொருட்டு மேலிருந்து பூமிக்கு இறங்கி வந்து பகவான் எடுத்த ஸ்ரீ ராமன், ஸ்ரீ கிருஷ்ணர் போன்ற அவதாரங்கள்.

அந்தர்யாமி ......................
தான் உகந்த உயிர்களான ஒவ்வொரு உயிரினுள்ளும் இருப்பதோடு, மனமுவந்து அவர்தம் இதயங்களில் எழுந்தருளி இருத்தல்.

அர்ச்சை ......................
அடியார்கள் விரும்பும் வகையில் பொன், வெள்ளி, செம்பு, மரம், மண், கல், சித்திரம் இவற்றில் எழுந்தருளி உலகோருக்கு அருளும் ஸ்ரீ மந் நாராயணன் கொண்ட திருவுருவம்.

இத்தனை மகிமைகள் படைத்த ஸ்ரீ

மந்நாராயணனின் மேன்மைக் குணங்கள் ஆறு எண்ணிக்கைக் கொண்டுள்ளது.

**இரக்கமெனும் வாத்சல்யம் .......................**
இரட்சிக்கும் குணங்கொண்ட தாயன்புக்கு இணை இது.

**உறவு எனும் சுவாமித்வம் .......................**
நாம் தெய்வத்திடம் பாராமுகமாக இருந்தால் கூட, சொத்துக்கு உரிய சுவாமி நமது காரியங்களைப் பூர்த்தி செய்து கொடுக்கும் "உடையவன்" என்ற உறவைக் குறிப்பது.

**தோழமையாகிய சௌசீல்யம் .......................**
நாம் பெறும் சிறுமை மற்றும் உயர்வு பார்த்து பின் வாங்கிடாமல், வேற்றுமையற்று கலந்து நீராகும் குணமிது.

**அறிவு எனப்படும் ஞானம் .......................**
உதறித் தள்ள வேண்டியவைகளையும், பற்ற வேண்டியவைகளையும் ஒரே நேரத்தில் அறிகின்ற புத்தியைக் கொடுக்கும் குணமாகும்.

**எளிமை எனும் சௌலப்யம் .......................**
மனிதர்கள் கண்டு மகிழ்வதற்காக மிகச் சுலபமாய் தன்னையே தாழவிட்டு அர்ச்சாரூபமாய் அமைந்த குணமே இது.

**ஆற்றலான சக்தி .......................**
நித்திய சம்சாரிகளை நித்திய ஆரிகளோடு தான் நினைத்த உடனேயே ஒரு கோவையாகச் சேர்க்கும் வல்லமை கொண்ட குணம்!
பகவானின் அருள் நீர்மைக் குணங்கள் பல ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீரியம், தேஜஸ் இப்படி இருக்க, இதில் வரும் ஞானமும், சக்தியும் மட்டும் மேன்மைக்கும் நீர்மைக்கும் பொதுவானது.

வைணவ திருமந்திரம் அறிவிப்பது இவைகளை

1. ஜீவாத்மா எம்பெருமானுக்கே அடிமைப் பட்டவன்.
2. எம் பிரானையே உபாயம் எனும் வழியாக உடையவன்
3. எம் பெருமான் அனுபவிக்கத் தகுந்த பொருளாய்க் கொள்ள உரியவன்.

நர - நாராயண ரிஷியாய், தானே ஒரு ஆசாரியனாகவும், ஒரு சீடனாகவும் இருந்து பத்ரிகா சிரமத்தில் அருளியதே திருமந்திரம் ஆகும்.

தேர்த்தட்டிலே அந்தக் கண்ணனே நின்று தன் தோழன் அர்ச்சுனனுக்குக் குரு ஷேத்திரத்தில் உபதேசித்த தாகும் சரமச்சுலோகம்.

பகவான் பிராட்டியாரைத் தன் மடியில் அமர்த்தி விஷ்ணு லோகத்தில் தானே ஸ்ரீ மந் நாரயணனாய் வெளியிட்டு அருளிய சிறப்பினைக் கொண்டது துவயம்.

வைணவ சம்பிரதாயத்தில், விஷ்ணு புராணம், புராணரத்தினம் என்றும் த்வயம் என்பது மந்திர ரத்தினமாயும், மகான் ஆனந்தார் அருளிய துதி ஸோலோகரத்தினம் எனவும் போற்றப்படுகின்றன.

வைணவமாகிய கடலில் இப்படி எத்தனையோ அரிய பொருட்கள் மூழ்க, மூழ்க கிடைத்துக் கொண்டே இருக்கும்!





KABA SURA
KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 88702 88701

# பெரும் செல்வம் பெற...

~ ரா.பன்னீர் செல்வம்

அன்னை ராஜராஜேஸ்வயின் அங்க அழகுகளை அடி முதல் முடி வரை வர்ணிக்கும் சௌந்தர்ய லஹரியின் 87 வது பாடல், அந்தப் பொலிவு மிகு அன்னையின் பூப்போன்ற பாதங்களின் அழகை மட்டுமல்லாது ஆற்றலையும் குறிப்பதாய் அமைந்து, "பெரும் செல்வம் பெற, ஏற்ற மந்திரப் பாடலாய் ஏற்றத்தைத் தருகின்ற வகையில் அமைந்துள்ளது.

## மந்திர பாடல்

"ஹிமானீ - ஹந்வத்யம் ஹிமகிரி - நிவாஸைக - சதுரௌ
நிசாயாம் நித்ராணம் நிசி சரமபாகே ச விசதௌ
வரம்லக்ஷ்மீபாத்ரம் ச்ரிய - மதிஸ்ரு ஜந்தௌ ஸமயினாம்
ஸரோஜம் த்வத் பாதௌ ஜனனி ஜயதச் - சித்ரமிஹ"

## பாடலின் பொருள்:

தாமரைப் பாதங்கள் என உன் பாதங்களை சொல்வது சரியாகாது! தாமரை பனியில் கருகிவிடும்ஞ உன் பாதங்களோ பனிமலையிலேயே படர்ந்து இருப்பது. இரவானால் இதழ் குவிக்கும் தாமரை உன் பாதங்களோ முப்போதும் மலர்ந்த கமலம் போல் மகிமை கூட்டும்! தாமரையில் திருமகள் அமர்ந்திருப்பாள். ஆனால், உன் திருவடித் தாமரைகளைத் தொழுதால், அந்த திருமகளையே அளித்து செல்வத்திற்கு அதிபதி ஆக்குவாயே தாயே...

## மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தைக் கண்டறிந்து தங்கத் தகட்டிலோ அல்லது ஒரு தட்டில் விபூதியையோ பரப்பி, அந்த யந்திரத்தை வரைந்து கொள்ள வேண்டும்.

அதை பூஜையில் வைத்து கிழக்கு முகமாக அமர்ந்து 16 நாட்கள் தினமும் 1000 முறை வீதம் மந்திரத்தை ஜபிக்க வேண்டும். அவ்வேளையில் செந்தாமரை மலர்களைக் கொண்டு "லலிதா த்ரிசதி" அர்ச்சனை செய்தல் நலம்.

தேங்காய், பழங்கள், தேன், பாயசம் ஆகியவற்றை நைவேத்யம் செய்வது சிறப்பு.

இதனை சரியாக செய்வதன் மூலம் இந்த பூஜையின் பயனாய் பெருமளவில் செல்வம் பெருகுவது மட்டுமல்ல, குபேர வாழ்வு அமைவதோடு திருமகளின் அனுக்கிரகமும் வரும் பொருள் உரைக்கும் திறனும் கைகூடி வளமார்ந்த வாழ்க்கை அமையும்.



சித்தர் மனம்

# மனித மனம்!

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியர்

இது விசித்தரமானது. மனிதனை அடையாளங்காட்டக்கூடியது அவன் கொண்ட மனமும், அம்மனதை செலுத்தி வாழும் வாழ்க்கை முறையும் தான்!

இவன் நல்லவன், இவன் கெட்டவன் என எவரும் முடிவு செய்வது அதாவது "தற்கால" முடிவு செய்வது அவன் கொண்ட மனதின் தன்மையைக் பொறுத்து அமைகிறது. இன்று நல்லவனாக பிறருக்கு காட்சி தருபவன், அவன் புரியும் ஒரு செயலால் "கெட்டவனாக" சித்தரிக்கப்படும் வாய்ப்புகள் நிறைய!

சந்தர்ப்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப, மனிதனின் செயல்களுக்கு ஏற்ப ஒருவன் சிறந்தவனாகவோ அல்லது மாசு உள்ளவனாகவோ கருதப்படுவான். எனவே மனக்கட்டுப்பாடுகள் மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகின்றன.

மாசு அல்லது குற்றமில்லாத தெளிந்த நிலையை சுட்டிக்காட்டுவது "சிந்தை" என்ற சொல்! சிந்தித்தல் எனும் தொழிலைச் செய்வது சிந்தை என்பார்கள் ஒரு காரியம் குறித்து ஆழமாக எண்ணுவதே சிந்தித்தல் ஆகும்.

அடிக்கடி மனக் குழப்பம் அடைவோர் எட்ட முடியாத உயர வானகமே சிந்தித்தல்! நற்சிந்தனையின் இயல்பு அதில் தெளிவு இருப்பதோடு, கூடவே அதற்குத் துணையாக துணிவும் வரும்.

"சிந்தையால் நினைவார் வினை தேயுமே" என்பது



தேவார பாசுரம் தரும் உண்மை நிலை!

சிந்தனையின் முதிர்ச்சி நிலையையே சித்தம் எனலாம். நல்ல இறைபக்தியுடையோர் வழுத்தில் அடிக்கடி இடம் பெறும் வாக்கியம் "எல்லாம் பகவத் சித்தம்" என்பது! அதாவது இறைவன் இப்படி எண்ணங்கொண்டுள்ளார் என்பதை அது குறிக்கும்.

சித்தம் தூய்மையாக இருப்பதால் அதில் பக்தி சுலபமாக ஏறி அமர்ந்து விடும். அதனால் அந்த சித்த மனதில் இறைவனும் சேர்ந்து கொள்வார்! இந்த சித்தம் நமது இந்து மதத்திற்கு மட்டும் முழு உரிமையானதல்ல! உலகில் உள்ள அத்தனை மதக்காரர்களும். இதில் சொந்தக்காரர்கள் தான்.
ஏதோ ஒன்றிரண்டு மதம் தவிர ஒரே கடவுள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வங்கள் உண்டு என்பதை இந்து மதத்தைத் தழுபுவார்கள் மட்டுமல்ல, பிற மதக்காரர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் அழைக்கும் திரு நாமங்கள் தான் வேறுபடும். சித்தத்தை திண்கயிறு என்று மாணிக்க வாசகர் வர்ணிப்பார். அந்த சித்தத்தில் வழி தவறி இருள் எனும் தீமை புகுந்து விட்டால், அந்த சித்தம் சித்தக்குகை என்று திருமூலர் திருமந்திரப் பாடலொன்றில் வர்ணிப்பார்.
முழுமையான சுத்தம் கொண்ட சித்தத்தில் "அன்பு" பரிபூரணமாக இருக்கும். ஆசை என்பது அறவே இருக்காது.

ஏன், தான் மோட்ச பதவி பெற வேண்டும் என்ற நோக்கமும் அதற்கு கிடையாது அதில் இடம் பெறும் ஒன்றே ஒன்று தான் கடவுளின் அன்பைப் பெறுவது என்பதே.
தான் கடவுளிடமிருந்து அதிக அளவு அன்பைப் பெற வேண்டும் என்று தான் அந்த சித்தம் சிந்திக்கும், அது தவறில்லை.

ஏனெனில் அத்தகைய அன்பு, உள்ளே வந்தவுடன் "மனித ஆசை" பறந்தோடி விடுகிறது. பகவத் பக்தி அதிகமாக உலக லௌகீகம், மதம் சார்ந்த விஷயங்கள், சடங்குகள் அந்த சித்தம் கொண்டவனை விட்டு தானே விலகிச் சென்றுவிடும். எனவே அச்சித்தம் கடவுளை "சிக்" தென பிடித்துக் கொண்டு விடுகிறது. எனவே நம் சித்தம் எல்லாம் வல்ல இறைவனை நோக்கி அமையட்டும்.




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com

போன்: 88702 88701

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்

~ ரா. பன்னீர்செல்வம்

நமது சனாதன தர்மத்தில் கூறப்பட்டுள்ள தத்துவங்கள் பற்றிய சந்தேகங்கள்பல எல்லோரது மனங்களிலும் எழக்கூடும். அப்படிப்பட்ட சந்தேகக் கணைகளை தனக்குள்ளேயே கேள்விகளாய் எழுப்பி, தன்னுடைய பண்பட்ட அனுபவத்தால் அவற்றிற்குரிய பதில்களை ஆய்ந்து அளித்துள்ளார், ஓய்வு பெற்ற உதவி கலெக்டர் ஆரூர் திரு. ஆர்.சுப்ரமணியம் அவர்கள்.

காஞ்சி மஹா பெரியவரின் ஆசிபெற்ற இவர் இன்றளவும் காஞ்சி மடத்தோடு நல்ல தொடர்புடையவர் பல மகான்களின் ஆசியோடு ஆன்மீக அனுபவம் நிறைந்த இவரது பதில்கள் நமது சத்வித்யா வாசகர்களுக்கு என்றும் மணக்கும் ஆன்மீக மலர்களாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை! ஆன்மீக அமுதம் பருகுவோம்.

**1. "நாளிகேராம்ர - கதளீ குட பாயச - தாரிணம் சரத் சந்த்ராம் - வபூஷம் பஜே பக்த காணதிபம்" என்ற கணபதி சுலோகத்தின் பொருள் என்ன?**

"தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், வெல்லத்தால் ஆன பாயசம் நிரம்பப் பெற்ற பாத்திரம் இவைகளை தம்முடைய பொற்கரங்களில் வைத்துள்ளவரும், சரத் காலத்தில் உதிக்கும் பூரணசந்திரனைப் போன்ற அழகு மேனியை கொண்டவருமான பக்தி கணபதியே உன்னையான் வணங்குகின்றேன்" என்று அந்த சுலோகத்துக்குப் பொருள்.

**2. அஷ்ட புஷ்பங்கள் எவை?**

புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவட்டை, பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்தாமரை ஆகிய எண்வகை பூக்கள்தான்.

**3. நமது அடிமனம் எத்தகையது?**

நமது கட்டுப்பாட்டில் இருப்பதாக நாம் நினைக்கும் புறமனமும், நமக்கு எட்டாத அகமனமும் ஒன்றுதான்!

புறமனத்தின் எல்லை மிகச் சிறிய ஒன்றே ஆனால் அகமனம் கொண்டதோ மிகப்பெரிய எல்லை கொண்ட சக்தி. இரண்டுமே இடையறாத தொடர்ச்சி கொண்டவைதான்!

கடலின் அடித்தளம் போல் சலனமின்றி கிடக்கும் அடிமனம் எல்லையில்லா பரம்பொருளான ஞான பரிபூரணத்தோடு தொடர்பு கொண்டேயிருக்கும் தன்மை படைத்தது. ஞானசக்தி, கிரியாசக்தி என்ற பேராற்றல்களுடன், அறிவு, செயல் இவற்றின் மூலக் களஞ்சியத்தோடு தொடர்பு பெற்றே அது இயங்கும்" என்பார்கள் தவயோகிகள்.

**4. "சைலத்" எனும் பொய்ச் சண்டை ஒரு ஆலய விழாவில் இடம் பெறுமாமே?**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடி பத்திரக் காளியம்மன் திருக்கோயில் விழாவில் இருவர் கலந்து கொண்டு, ஒருவரையொருவர் பொய்யாக அடித்து, குத்தி சண்டையிடுவது பொதுமக்கள் கண்டு மகிழும் சம்பவமாக ஆண்டுதோறும் இடம் பெறும்.

**5. விநாயகரின் வாகனமான மூஞ்சுறு கொண்ட சிறப்பென்ன?**

உலகிலுள்ள பால் குடிக்கும் பிராணிகளில் மிகச் சிறியது மூஞ்சுறு.

மூஞ்சுறு வடிவத்தில் அக்னி பகவான் இருந்தாராம்.

ஒரு சமயம் அக்னி பூமிக்கு அடியில் மறைய நேர, பரமசிவன் அதைத் தேடிக்கொண்டு வந்து கணபதிக்கு அளிக்கவே, அதுவே அக்னி வடிவ மூஞ்சூறு வாகனமானது என்பதை தைத்திரிய பிரமாண நூல் கூறுகிறது.

அக்னி சக்தியைக் கட்டுப்படுத்தும் மகாசக்தியாக பிள்ளையார் திகழ்கிறார்

**6. நம் மனம் செம்மையானால் என்ன பலன்கள் கிட்டும்?**

"மனம் செம்மையாக மந்திர உச்சாடனம் தேவையற்றது வாயுவை அடக்க வேண்டாம்; வாசியை உயர்த்த வேண்டாம்; மனம்

செம்மையாக, மந்திரமும், செம்மையாகும்” என்று சிவவாக்கியர் அருளுவார்.
“தூய்மையான மனமே உயர்ந்த மந்திர சக்திகொண்டது என்பார் ஞானசம்பந்தர் தன் பாடல் ஒன்றில்.

**7. “ராஜ சியாமளா” என்ற தெய்வம் எவ்வூரில் குடி கொண்டுள்ளது?**

கல்விக் கடவுள் சரஸ்வதிதேவியின் மறுபெயரே இது.
ராஜ சியாமளா என்ற திருப்பெயருடன், காஞ்சிபுரம் காமாட்சி ஆலய பிரகாரத்தில் அதிசயமாய் எட்டுத் திருக்கரங்களுடன் தனி சன்னிதியில் அந்த கலைமகள் தரும் தரிசனம் அற்புதம்

**8. சிரஞ்சீவி என்று யார் யாரை அழைக்கிறார்கள்?**

ஆஞ்சநேயர், விபீஷணன், அசுவாத்தாமர், வியாசர், மகாபலி, கிருபர், பரசுராமர் ஆகிய எந்த எழுவரே “உலக சிரஞ்சீவிகள்”.

**9. யாகங்களில் பயன்படுத்தப்படும் ஸமித்துக்கள் எந்த மரங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன?**

வில்வம், ஆல், வன்னி, கருங்காலி, மா, முருங்கை, அத்தி, பலாசு, சந்தனம், வேங்கை, அரசு, வாகை ஆகிய வகைகளான. குறிப்பிட்ட மரங்களிலிருந்து எடுக்கப்படுபவையே ஸமித்துகள்.

**11. பகவான் நாமத்தை உச்சரித்தால் புண்ணியம்தான் அந்த புண்ணியம், தலத்தின் பெயரை உச்சரித்தால் கிடைக்குமா?**

இந்தக் கதையைப் படித்தால் அதற்கான விடை கிடைக்கும்.
காவிரி டெல்டாப் பிரதேசங்களில் தென்னை, வாழை சிறப்பாக விளையும். நதிக்கரையோரம் உள்ள தென்னை மரத்திலிருந்து அடிக்கடி காய்கள் விழுவதால், காவிரி நீர் சுவையாகிவிடும். அத்தண்ணீர் பாய்ச்சலால் விளையும் நெற்கதிர்களும் சுவையான அரிசியைத் தரவல்லது. எனவே ஒரு வெளியூர் அரிசி வியாபாரி வேறு இடத்தில் விளைந்த தான் விற்கும் அரிசியை வண்டியில் ஏற்றி ஸ்ரீரங்கம் டெல்டா பகுதியில் விளைந்த அரிசியாக இது இருப்பதாக காட்ட “திருவரங்கம் அமுதுபடி வாங்கலியோ!” எனக் கூவி விற்று வாழ்ந்து வந்தான். அவ்வூர் பெயர் சொல்லி விட்டதால் அரிசியின் தரம் அருமையாக இருக்கும் என்று பலபேர் போட்டிப் போட்டுக் கொண்டு அந்த அரிசியை வாங்கவே, அந்த வியாபாரி பெரிய செல்வந்தனானான்.
ஒருநாள் அந்த வியாபாரி இறந்து விட்டான். அவன் திருவரங்கத்தில் தயாராகாத அரிசியை பொய் சொல்லி விற்றதால், அவனை நரகத்திற்கு யமகிங்கரர்கள் அழைத்துச் சென்றனர். ஆனால் அவர்கள் எதிரே வந்து குறுக்கிட்ட நாராயண தூதர்கள் “இந்த பரமபக்தன் ஸ்ரீவைகுண்டம் புக தகுதியானவன் அவனை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்” எனச் சொன்னார்கள். அதன் காரணத்தையும் இப்படி உரைத்தார்கள்.
“இந்த வியாபாரி பொய் சொல்லி தினமும் தன் விற்பனையைச் செய்திருந்தாலும், தினசரி ஸ்ரீரங்க திவ்யதேச திருநாமத்தைக் கூவி சொன்னதால், இவனுடைய பாவங்கள் அனைத்தும் ஒழிந்துவிட்டன. எனவே வைகுந்த விண்ணகரிலே நித்ய சூரிகளுடன் கலந்து வாழும் பாக்கியத்தை பெற்று விட்டான் இவன்” என்று
எனவே, நாம பலன் தல உச்சரிப்பு பலன் இரண்டுமே சிறப்பானவைதான்!



## கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில்

# தரிசிக்க வேண்டிய திருத்தலங்கள்....

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

நெல்லைச் சீமை எனும் புராணம் மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க ஊரை அடுத்த பெரு நகரமே நாகர் கோவில்! நெல்லைச் சீமை என்பது தற்போது திருநெல்வேலி மாவட்டம் நெல்லை மாவட்டம் என்பர். நாகர்கோவில் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் என்பர். நாகர் கோயில் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலை நகர்.

இயற்கை அழகு முழுவதும் கொட்டிக் கிடக்கும் பேரழகு வாய்ந்த ஊரே நாகர்கோவில்! எங்கு திரும்பினாலும் பசுமை படர்ந்த பூமி! இயற்கை அன்னை மரகத மேனி கொண்டு வெண்மேகத்துகில் போர்த்தி கார்மேகத்தையே கருங்கூந்தலாக கொண்டு கருணையை திற்பரப்பு அருவியாகப் கொண்டு, மொத்த அழகோடு அருள் காட்சி தரும் குறிஞ்சி - முல்லை- நெய்தல் - மருதம் எனும் நால்வகை நிலங்களை திலகமாக கொண்ட நாகர் கோவிலில் எத்தனை எத்தனை கோயில்கள் அப்பப்பா..... அவ்வளவும் அருளமுதம்.

நாங்குநேரியை கடந்து - வள்ளியூரைக் கடந்து நாகர்கோவில் எல்லையை தொடப்போகிறோம் என்ற உணர்வு வந்ததும் உண்டாகுமே மகிழ்வு! உற்சாக பெருவெள்ளம் பெருக்கெடுக்கும்' முதற்கண் நெடுதுயர்ந்த பசுமை மிகு தொடர் மலைகள் மேகங்கள் வரவேற்க, வண்ண மயில்கள் வாழ்த்துக் கூற, இளங்குயில்கள் தெய்வீக ராகம் இசைத்திட வாழைத் தோப்புகள் வாஞ்சையுடன் கையசைக்கும் அழகுமிகு ஆயிரம் தாமரைகள் ஆர்வமுடன் தேவாரப்பதிகம் இசைக்கும்.
இதோ ஆரல்வாய்மொழி அருள்மிகு இசக்கி அம்மன் திருக்கோயில்! எண்ணியதை ஈடேற்றும் சர்வ சக்தி கொண்ட பராசக்தி. நாகர்கோவிலை மட்டும் அல்ல நம்பியவர்களை காப்பாற்றும் கண்கண்ட கடவுள்.

காவல் தெய்வமாக பிரசித்தி பெற்ற ஞான ஆலயம். தாயை வழிப்பட்ட நாம் அந்த அருளம்மை உலகம்மை திருவருளால் சிவசக்தி ஞான பாலன் திருக்கோயிலை தரிசிக்கப் போகிறோம் தோவாளை என்னும் ஊர் இதோ- தோவாளை என்னும் சிற்றூரில் ஓர் அழகிய குன்று உள்ளது அந்தக் குன்றின் மீது கோயில் கொண்டுள்ள முருகன் அழகினைக் காண தரிசிக்க கண்கோடி வேண்டும்.

சுற்றிலும் வயற்வெளி. அருகில் தெரியும் மேகம் தவழ பசும் மலைத்தொடர்கள். உரசியபடி செல்லும் எழிலார்ந்த மயில்கள். அழகு அழகான தாமரைப் பூக்கள் பூத்த நீர்நிலைகள். அந்தப் பகுதியே முருகப்பெருமானின் பேரழகுடன் ஜொலிக்கிறது. நாகர்கோவில் நகர பகுதியில் அருள்மிகு நாகராஜா கோவில் அமைந்துள்ளது. மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயிலாகும்.

இங்கு அர்ச்சகர்கள் பிரசாதம் தரும் அழகு நாகர்கோவில் திருக்கோயில்களை தவிர வேறு எங்கும் காண முடியாது. மனதிற்கு அமைதியும், ஆனந்தத்தையும் தரும் கோயிலாக திகழ்கிறது. கோவில் நுழைவாயிலே பிரமிப்பு ஊட்டுகிறது. நாகர்கோவில் நகரில் அருள்மிகு தேடிவந்த விநாயகர் கோவில் ஒன்று உள்ளது. மிகச்சிறிய கோயிலாகவும் இல்லாமல் - மிகப்பெரிய கோயிலாகவும் இல்லாமல் அருள் மழை பொழியும் திருக்கோயில் ஆக உள்ளது.

நாகர்கோயிலில் முத்தாரம்மன்

கோயில் அருகில் - அருள்மிகு இடர் தீர்த்த பெருமாள் கோயில் உள்ளது. மிகவும் அழகு வாய்ந்த அற்புதத் திருக்கோயில்.

கண்ணபிரான் அர்ஜுனனுக்காக கீதா உபதேசம் புரியும் போர்க்களக் காட்சியை நினைவூட்டும் அற்புதக் காட்சி வடிவமைத்தும் கோயிலைப் புதுப்பித்து உள்ளதும் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

அழகம்மன் கோயில் அருள் நலம் கொண்டது. நாகர்கோவில் நகரில் வடிவீஸ்வரம் என்ற பகுதியில் ஸ்ரீ முத்தாரம்மன் கோயில் ஒன்றும் உள்ளது.

என்ன நினைத்து வேண்டுகிறோமோ அப்படியே நிறைவேற்றித் தரும் கண்கண்ட தெய்வமாக காட்சி தருகின்றாள் இந்த அம்பிகை.
பத்மநாபபுரம் - புத்தேரி - திசையன்விளை - களியங்காடு - கிருஷ்ணன் கோயில் - மீனாட்சிபுரம் - விளவங்கோடு என ஊர்கள் பல கொண்டிருந்தாலும் ஆலயங்கள் சிறிதும் பெரிதுமான கோயில்கள் அதிகம் கொண்டுதுள்ளதற்கு முக்கிய காரணம். இறை பக்தியே பெருங்காரணம். நாகர்கோவில் மக்கள் இறை நம்பிக்கை கொண்ட உழைப்பாளிகள்.

நாகர்கோவிலில் இருந்து கன்னியாகுமரி செல்லும் பாதையில் ஸ்ரீ தாணுமாலயன் சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. சுசீந்திரம் என்ற பகுதியில் இக்கோயில் அமைந்துள்ளது. சிவன் இங்கு மும்மூர்த்திகளும் ஓர் மூர்த்தியாக அருட்காட்சி தருகின்றார்.

கோயில் பிரகாரத்தில் விஸ்வரூப ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னிதி அமைந்துள்ளது. ஈசன் நாத மயமாக காட்சி தருகின்றார் சுசீந்திரம் கன்னியாகுமரியில் - ஸ்ரீ பகவதி அம்மன் கோவில் உள்ளது.
காண கண் கோடி வேண்டும் அம்பிகை நித்தம், முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில் தவம் செய்யும் அழகே அழகு! தரிசிப்போம் தாயின் திருவருள் பெறுவோம்.



# வேலிப்பருத்தி

~ ரா.பன்னீர் செல்வம்

சத்வித்யாவின் இந்த இதழில் நாம் நமது வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் மூலிகை வேலிப்பருத்தி என்னும் அற்புத மூலிகையாகும்.
வேலி ஓரங்களில் அதிக அளவில் காணப்படும் இந்த வேலிப்பருத்தியின் இலைகள் சற்றொப்ப இதய வடிவத்திலே இருக்கும். இரட்டை காய்களும் அதனுள்ளே முட்டை வடிவிலான பட்டு போன்ற விதைகளும் காணப்படும்.
இந்த வேலிப்பருத்திக்கு உத்தாமணி என்ற பெயரை சித்தவைத்தியம் சூட்டியுள்ளது.



### குணப்படுத்தும்நோய்கள்

சுவாசக் கோளாறுகள், காசநோய், ஆஸ்துமா, வாயுவால் ஏற்படும் கை, கால் வலி, இருமல், இளைப்பு, குழந்தைகள் உடல் வலுப்பெறுதல், ரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, வாத வீக்கம், போன்ற நோய்கள் இந்த மூலிகையால் குணமாகும். இந்த எளிய, சாதாரண மூலிகை இத்தனை நோய்களை குணமாக்குவது எத்தனை அதிசயம்? என்ற மலைப்பே ஏற்படுகிறது.

### பயன்படுத்தும் முறை:

இதன் இலையை சுத்தம் செய்து இடித்து சாறெடுத்து தினமும் காலையில் 1 டீஸ்பூன் சாப்பிட, ஆஸ்துமா ஒழியும்.
இந்த இலைச்சாற்றை காய்ச்சி 48 நாட்கள் குடித்து வந்தால் சுவாச காச நோய் குணமாகும்.
இதன் இலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து காலையில் 1 டீஸ்பூன் பொடியுடன் தேன் கலந்து சாப்பிட வாயுக் கோளாறுகள் தீரும், இருமல், கோழைக்கட்டு போன்றவையும் தீரும்.
ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் மிளகை எடுத்து, அதனுடன் இந்த இலைச் சாற்றை கலந்து ஊற வைத்து, பின் 7 நாட்கள் அதை காயவைப்பது கற்பக மிளகு எனப்படும். தினம் ஒரு மிளகு வீதம் சாப்பிட்டு வந்தால் மூச்சிரைப்பு குணமாகும்.

இதன் இலைகளைக் கழுவி, நிழலில் உலர்த்தி, பொடி செய்து கொண்டு இதனுடன் சீரகத்தூள் கலந்து 2 டம்ளர் தண்ணீர் விட்டு காய்ச்சி, ஒரு டம்ளராக்கி நோஞ்சான் குழந்தைகளுக்குக் கொடுத்தால் உடல் பலமாகும்.
ரத்த அழுத்தம் நிரந்தரமாய் குணமாக, 6 இலைகளை எடுத்து, விழுது போல் அரைத்து 1 டம்ளர் காய்ச்சிய பசும்பாலில் கலந்து வெறும் வயிற்றில் குடிக்கலாம். இப்படி செய்வதால் நரம்புத் தளர்ச்சியும் குணமாகும்.
இத்தனை பயனுள்ள இந்த மூலிகையை பயன்படுத்தி நலம் பெறுங்கள்.

# சிவனருள் சித்திக்கும் சைவப் பெருநேறி!

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

"அங்கமெல்லாம் குறைந்து அழுகு தொழுநோயாராய் ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

அப்பர் பெருமான் அருளிச்செய்த திருப்பதிகமாகும்.

சிவ வழிபாடே சைவ சமயமாகும். இறைவனை தாயாக வழிபட்டவர்கள் சாக்தம் அதாவது சக்தி வழிபாடு ஆகும். இறைவனை தந்தையாக வழிபட்டவர்கள் சைவம் (சிவ வழிபாடு) ஆகும். இறைவனை எங்கும் நிறைந்த பரம்பொருளாக வழிபட்டவர்கள் வைணவம் (விஷ்ணு வழிபாடு) ஆகும். இறைவனை பேரின்ப வடிவமாக வழிபட்டவர்கள் கௌமாரம் (முருக வழிபாடு) ஆகும். இறைவனை ஒளி வடிவமாக வழிபட்டவர்கள் (சூரிய வழிபாடு) ஆகும். இறைவனை ஓங்கார வடிவமாக வழிபட்டவர்கள் (முருக வழிபாடு) ஆகும். அறுவகைச் சமயங்களுள் வைணவ சமயத்தை தவிர பிற சமயங்கள் சைவ சமயத்தில் சங்கமம் ஆகி விட்டன.

சைவ சமயம் மிக மிகத் தொன்மையானது சிவன் படைத்தவை எல்லாமே! சிவமயம்! எல்லாம் சிவன் செயல். காவிரி கரையின் நெடுஞ்சோலையில் ஒரு வெண்ணாவல் மரத்தில் சர்வேஸ்வரன் வெளிப்பட்டார் (ஜம்புகேஸ்வரர்)
காஞ்சிபுரத்தில் சர்வேஸ்வரன் ஒரு மாமரத்தின் கீழ் அருட் காட்சி அளித்தார். பிற்காலத்தில் அந்த மாமரமே ஏகாம்பரம் (ஏகம், ஆம், மரம்) ஒரு தனி மரம் என்பதே அப்பொருள் மரங்களின் கீழ் அமர்ந்து மோன நிலையில் இருப்பது மிகுந்த சிறப்பு. ஈசனே ஆலமர் கடவுள் ஆயினார் முருகப் பெருமானே கடம்ப மரத்தில் விழைந்தே உறைவதாக புராணங்கள் கூறுகின்றன.

கடம்பன் என்ற பெயரும் உண்டு. குறுந்த மரத்தடியில் மணிவாசகப் பெருமான் மெய்ஞானம் உணரவில்லையா? போதி மரத்தின் கீழ் புத்த பெருமானும் ஞானம் பெற வில்லையா? முழுமுதற் கடவுளாக உள்ள விநாயகப் பெருமான் அரச மரத்தடியில் அமர்ந்து அருள் பாலிக்க வில்லையா? வேப்பமரத்தின் கீழ் மாரியம்மன் அருள் புரிய வில்லையா? மரங்களில் பூத்துக்குலுங்கும் வாசமிகு மலர்களால் அடியவர்கள் பூசை செய்வது பன்னெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது.

பூவால் பக்தி செய்வதே பிற்காலத்தில் பூசை என ஆனதாக உணரலாம். காஞ்சிபுரத்தில் மாமரத்தின் கீழ் அன்னை உமா மகேஸ்வரி ஊசி முனையில் இருந்து கடுந்தவம் இருந்து



சர்வேஸ்வரனை அடைந்தார் திருப்பாதிரிப்புலியூரில் பாதிரி மரத்தின் கீழ் அன்னை பராசக்தி பெரிய நாயகியாக, அருந்தவ நாயகியாக கடுந்தவம் இருந்து ஈசனை அடைந்தாள்.

இந்த பாதிரி மரம் 12 வகையான பூக்களை பூக்கும் அதிசய மரமாக காணப்பெற்றது.

இந்தப் பாதிரி மரம் கடலூர் திருப்பாதிரிப்புலியூர்

அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயிலில் இன்று உள்ளதை காணலாம்.

சைவ சமயத்தில் ஞாயிறு வழிபாடு, திங்கள் வழிபாடு, மலை வழிபாடு, ஆறுகள் வழிபாடு, நாக வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு, முருக வழிபாடு, திருமால் வழிபாடு, சிவலிங்க வழிபாடு என எந்த வழிபாடுகள் செய்தாலும் விநாயகர் வழிபாடு செய்தால் தான் எதுவுமே சித்திக்கும். விநாயகர் சிவசக்தியின் மூத்த பிள்ளையாயிற்றே
திருக்கோயில்கள் எழுந்தன. திருவருள் கூடமும் தெய்வ வழிபாடுகள் தொய்வின்றி தொடர்ந்தன் அறுபத்து மூவர் அருந்தொண்டாற்றினர் சமயகுரவர் இறைவனை தரிசித்து தேவார திருவாசகம் பாடி உருகினர் மாமன்னர்கள் முதல் குறுநில அரசர்கள் வரை கோயில்களில் பக்தியை வளர்த்தனர்.

கோயில்களுக்குத் திருப்பணிகள் - நன்கொடைகள் என அள்ளி வழங்கினர். எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் எழுந்தன
திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணீறு அணியாத திருவிலூரும்
பருக்கோடி பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பல தளிகள் இல்லா ஊரும்
விருப் பொடு வெண் சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண் கொடியும் இல்லா ஊரும்
அருப் பொடு மலர் பறித்திட்டு உண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரலல்ல அடவி காடே
என்று அப்பர் பெருமான் தம் தேவாரத்தில் அருளியுள்ளார். சிவமே ஒன்று பரம்பொருள் ஆகும். சிவமும் அவரே சக்தியும் அவரே அயன் அரி அரண் மூன்று அம்சமே சிவம் தான் (ஸ்ரீ தாணுமாலயன் சுவாமி கோயில் சுசீந்திரம் சான்றாகும்)

ஆக்கல் - காத்தல் - அழித்தல் (ஒடுக்குதல்) இம்மூன்றும் ஈசனின் 3 தொழில்கள் சத்து சித்து ஆனந்தமே சிவானந்த இறைநிலை ஆகும்.

பதி பசு பாசமே சைவ சித்தாந்தம்! முப்பெரும் சக்திகளே இச்சாசக்தி - கிரியா சக்தி - ஞானசக்தி வடிவானவர் சிவன் ஆணவம் - கன்மம் - மாயை இம்மூன்றும் விடைபெற்றால் பசுவாகிய நாம் பதியாகிய சிவத்தை அடையலாம்

திருவாரூரில் பிறப்பதும், சிதம்பரத்தை தரிசிப்பதும், திருவண்ணாமலையை நினைப்பதும், காசியில் இறப்பதும் முக்தியை சிவன் தருவார் என்பது சைவப் பெருமக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும். இதுவே சத்தியம். மனுநீதிச் சோழன் வீதி விடங்கனுக்கு ஈசன் காட்சி தந்த - திருவாரூர் தேரழகு! என்பார்கள்.
திருமூலர் - மூலன் உடலுக்குள் பிரவேசம் செய்து திருமந்திரம் அருளியதால் திருவிடைமருதூர் தெருவழகு என்பார்கள்.

விளக்கைத் தூண்டிய எலி - ஈசனருளால் மறுபிறவியில் மகாபலி சக்கரவர்த்தி ஆனது. வேதாரண்யம் விளக்கழகு ஆனது என்பார்கள்.
திருவாரூர் - காஞ்சிபுரம் மண் ஆகவும்
திருவானைக்கா - நீர் ஆகவும்
திருவண்ணாமலை - நெருப்பு ஆகவும்
திருக்காளஹஸ்தி - காற்று ஆகவும்
சிதம்பரம் - ஆகாயமாகவும்
போற்றப் பெறுகிறது. புனிதம் பெறுகிறது.

இரத்தின சபை - திருவாலங்காட்டையும் பொன்னம்பலம் - எனும் கனகசபை சிதம்பரத்தையும் வெள்ளியம்பலம் என்னும் ரஜதசபை மதுரையையும் தாமிரசபை திருநெல்வேலியையும் சித்திர சபை திருக்குற்றாலத்தையும் பஞ்ச சபைகள் ஆக போற்றி வழிபட பெறுகின்றன.

தில்லை நடராஜப் பெருமானுக்கு உரிய ஆறு அபிஷேகங்களை தரிசிப்பது மிகவும் விசேஷம். வைகறைப் பொழுதில் மாதத் திருவாதிரையில் அபிஷேகம் காண்பதும் உத்திரம் நட்சத்திரம் மாலையில் அபிஷேகம் காண்பதும் சிறப்பு மாசி - சித்திரை -ஆவணி- புரட்டாசி மாதங்களிலும் அபிஷேகங்கள் மகா சிறப்புடன் நடைபெறுவது உண்டு.

சிவபெருமானின் ஒன்பது நிலைகளில் சதாசிவம் இலிங்கம் அரு உருவமே சிறப்பானது. பூலோக கயிலாயம் என்று போற்றப்பெறும் திருவையாறு - திருக்குற்றாலம் -சிதம்பர தளங்களை தரிசிப்பது நலம்.

கும்பகோணம் மகாமகம்! மதுரை சித்திரை திருவிழா திருவாரூர் ஆழித்தேர் - சிதம்பரம் ஆருத்ரா தரிசனம் திருவண்ணாமலை கார்த்திகை தீபம் சுசீந்திரம் தேரோட்டமும், திருமயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில் அறுபத்து மூவர் விழாவும், திருச்செந்தூர் வைகாசி விசாகம், பழனி பங்குனி உத்திர விழாவும், திருத்தணி படி உற்சவமும் - சீர்காழி திருமுலைப்பால் விழாவும் - காரைக்கால் மாங்கனி விழாவும் வடலூர் தைப்பூச திருவிழாவும் தரிசிப்பது சைவப் பெருமக்களின் பெருங்கடமையாகும்.



தென்னாடுடைய சிவனை போற்றியே தரிசிப்போம் என்னாட்டவர்க்கும் இறைவனாக அருள் பாலிக்கும், உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கு அரியவர் அலகில் சோதியன் அதிலும், ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியாக உள்ள சர்வேஸ்வரனை நம் இதய கனகசபையில் நடனமிடும் உமாமகேஸ்வரனை உலகம்மையாம் சிவகாமசுந்தரி உடனாய ஸ்ரீ நடராஜ மூர்த்தியை மனம் மொழி மெய் ஒன்றுபட வழிபடுவோம் பதினாறு வகை பேறுகளும் பெறுவோம்.

## நாயன்மார் வரலாறு

# திருநாளைப்போவார் (நந்தனார்)

~ ரா.பன்னீர் செல்வம்

மயிலாடுதுறை என்கிற மாயவரத்திற்கு அருகில் மேலாதனூர் என்னும் கிராமம்! இந்த கிராமத்தில் பறையடிப்பதையே தொழிலாகக் கொண்ட சமூகத்தில் பிறந்தவர் நந்தனார்

ஆலய விழாக்கள், சுவாமி புறப்பாடு என அனைத்து நல்ல, தீய காரியங்களுக்கும் பறையடிப்பதையே தொழிலாய்க் கொண்டு, அதன் மூலம் கிட்டுகின்ற வருமானத்தில் உயிர்வாழும் அந்த சமூகத்தில் நந்தனார் சற்று வித்தியாசமானவர்! சிவபக்தர்!

தன்னைப் படைத்த சிவனுக்காகவன்றி, தனக்கென வாழா தகைமையாளர்! இவருடன் இணைந்து பணியாற்றும் பறையடிப்போர், அனைவரும் கள்ளும் மாமிசமும் சுவைக்கவே அந்த வருவாயை பயன்படுத்தினர். ஆனால், நந்தனாரோ தனக்குக் கிடைக்கும் கூலியில் தன் அடிப்படைத் தேவைகேற்ப பணத்தை வைத்துக்கொண்டு, மீதமுள்ள பெரும் பகுதி பணத்தை இறைவன் ஈசனின் ஆலயத்தில் விளக்கெரிய எண்ணை வாங்கிக் கொடுப்பார்! இதிலும் இவருக்கு ஒரு வருத்தம்!

என்னதான் சுவாமி சிவிகை மீது ஏறி, ஊருக்கெல்லாம் தரிசனம் கொடுக்க சென்றாலும் அந்த ஊர்வலத்தின் முன்னாலே பறையடித்து, இறைவன் வீதியுலா வருவதை அறிவிக்கும் அரிய தொழிலை செய்தாலும் "தான் ஒரு புலையன்" என்பதால் ஆலயத்தின் உட்சென்று ஆண்டவனை தரிசிக்கும் பெரும்பேறு வாய்க்கவில்லையே என்ற வருத்தம் இவருக்குள் எப்போதுமே உண்டு

தன் உழைப்பில் கிடைத்த பணத்தில் திருக்கோவிலில் விளக்கேற்றவும் தன் சார்பில் இறைவனுக்கு அர்ச்சனை செய்யவும் இவர் கையாண்ட உபாயம் என்ன தெரியுமா?

தான் கொடுக்கும் எதையும் இறைவன் ஏற்றுக் கொண்டாலும் அந்த ஊரின் பெருந்தனக்காரர்களும் ஆலய அர்ச்சகர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நந்தனார் நன்கறிவார் பிறகு எப்படி இவரது பூஜைப் பொருள்கள் இறைவனை சென்று சேர்வது?...

முன் நாள் இரவே பூ, தேங்காய், பழம், எண்ணெய் என பூஜைப் பொருட்களை வாங்கி வைக்கும் நந்தனார், அதிகாலையில் சென்று, ஆலயம் திறப்பதற்கு முன்பே.... ஆலய வாசலில் வைத்து விட்டு, தூரத்தில் நின்று பார்ப்பார்


ஆலயத்தைத் திறக்க வரும் அர்ச்சகர், "யாரோ ஒரு பக்தர் பூஜை நேரத்தில் தன்னால் வர முடியாது என்ற காரணத்தால் பூஜைப் பொருள்களை ஆலய வாசலில் வைத்துவிட்டு தன் பணியை கவனிக்க சென்று விடுவார் போலும்". என எண்ணி அந்த பொருட்களை எடுத்து சிவபூஜை செய்தார் இதை தொலைவில் நின்று பார்க்கும் நந்தனாருக்கு தானே பூஜை செய்ததாய் ஒரு மனத் திருப்தி உண்டாகும்

இப்படி மகிழ்ந்திருந்த நந்தனாரின் உள்ளத்தில் உற்சவமூர்த்தி வலம் வரும்போது பறையடித்து கட்டியம் கூறுவது போல் தெரிவிக்கிறோமே, உள்ள ஆலயத்தில் அருள் புரியும் அந்த மூலவ மூர்த்தி எப்படி இருப்பார்? அந்தக் கருணை வடிவை நாம் தரிசிப்பது எக்காலம்? அந்த மூல ஒளியை, முக்கண் முதல்வனை கண்ணாராக் கண்டு, நெஞ்சம் நெகிழ வணங்குவது எக்காலம்? இறைவா, அடியேனின் இந்த ஆசை நிறைவேறுமா? அன்றி தீரா மனதாசையோடு மண்ணுகிரையாவேனா?" என்று வருத்தத்தோடு உள்ளம் உருக வேண்டியவாறே, தன் வாழ்நாளைக் கடத்திக் கொண்டிருந்தார், நந்தனார்

பறைத் தொழில் இல்லாத காலங்களில் விவசாயக் கூலியாக சென்று வேலை பார்க்கும் வழக்கமுள்ள நந்தனார், ஒருநாள் ஒரு வேலையும் இல்லாது போகவே அருகிலே உள்ள திருப்புன்கூடர் ஆலயம் சென்று இறைவனை வணங்க வேண்டும் என்ற ஆவல் மேலிட, திருப்புன்கூடர் நோக்கி நடந்தார். இறைவனை காணும் எண்ணம் ஈடேற விட்டாலும் அந்த புனித மண்ணை மிதித்தாவது இப்பிறவியின் இழிவு தீரட்டும் என்னும் எண்ணத்தில் கோவிலை அடைந்தார்.

கோவிலில் கூட்டம் அதிகமில்லை. சொற்ப அளவிலேயே பக்தர்கள் இருந்தனர். ஆலய வாசலில் நின்று பார்த்தாலே ஆண்டவன் தரிசனம் பெறலாம் என்பதான ஆலய அமைப்பு

ஆவலோடு தலையுயர்த்திப் பார்த்தார், நந்தனார் இருந்த பக்தர்கள் இருபுறமும் பிரிந்து அமைதியாய் வரிசையில் நின்றனர் மூலவருக்கு அருகிலே



ஒளிர்ந்த சர விளக்கு எரிவது நன்றாக தெரிந்தது! அர்ச்சகர் காட்டிய ஆரத்தியில் தீபம் தாங்கிய திருவிளக்குகள் தெரிந்தனவே தவிர சிவலிங்கத் திருமேனி எங்கே? எங்கே? தேடின கண்கள்

நந்தி மறைத்தது!

ஆம்! சிவலிங்கத்தின் எதிரே அமர்ந்து, சிவனுக்கு மூச்சுக்காற்றை அளித்துக் கொண்டிருந்த நந்தியம் பெருமான், நந்தனாரின் மூச்சுக்காற்றை நிறுத்தும் விதமாக இறைவனை மறைக்க....

நந்தனார் தலைக்கு மேலே கைகளை உயர்த்தி, கண்களில் நீர் சொரிய, "எந்தையே இறைவா... திருப்புன்கூடர் தலத்திலாவது திருப்பம் ஏற்படும்ளூ உன் திவ்ய தரிசனம் பெறலாம் என்றெண்ணி வந்தேனே.... என்னே ஏமாற்றம்?... என் விதி மாறாமல் நந்தியும் நின்றதே.... கயிலை நாதனே என் கவலை தீராதா?" என பலவாறு புலம்பி நின்றார்!

பக்தரின் உள்ளத்தை அறியாதவரா பரமன்?.... நந்தன் மனம் படும் பாடு நாயகன் அறிந்தான்! "நந்தன் தரிசனம் பெற நந்தி தானே தடை?. தடையை நீக்குவோம்; நந்தன் மனக்குறை போக்குவோம்; என சிரித்த ஈசன், தன்னை நோக்கிய வண்ணமிருக்கும் நந்தியை நோக்கி, "சற்றே விலகி இரும் பிள்ளாய்", என கட்டளையிட... ஒரு கணப்பொழுது..... கண்ணிமைக்கும் நேரம், நந்தி சற்றே விலக.... நாயகனின் தரிசனம் கண்டார், நந்தனார்

"இது போதும் இறைவா, இது போதும்! ஏழையேன் எனக்கிரங்கி நந்தியை விலகச் செய்த நாயகனே் மறை முதல்வா் என் மனக்குறை நீக்கினையே் இந்த ஜன்மம் எடுத்ததின் புண்ணியம் பெற்றேன்!" என தலை மீது ஏற்றிய, கும்பிட்ட கைகளை இறக்காமல் கூத்தாடினார் ஆனந்தக் கூத்து! கண்களில் பொங்கிய ஆனந்தக் கண்ணீரைத் துடைத்தார்! தன் கண்ணீரைத் துடைத்தாரே ஒழிய, அந்த கண்களால் கண்ட தரிசனத்தை நெஞ்சிலே நிறுத்தி, மீண்டும் மீண்டும் வணங்கினார்

கோடானு கோடி நன்றியை அந்த கோமனின் தாள்களில் சமர்ப்பித்து விட்டு மகிழ்வோடு ஊர் திரும்பினார் தன் நோக்கத்தில் வெற்றி கண்ட ஒருவன், அதை மீண்டும் மீண்டும் சுவைக்க எண்ணுவதே மனித இயல்பு! தன் நீண்ட கோரிக்கையை ஏற்று தரிசனம் தந்த இறைவனை மறுபடியும் காண வேண்டும் எனும் ஆவல் பெருக்கெடுத்தது

நந்தனின் நீண்ட நாள் கனவு, ஆனந்தக் கூத்தாடும் ஆடற்கரசனை அந்த தில்லையம்பதியிலே சென்று தரிசனம் காண வேண்டும் என்பதே

நந்தனின் உடனிருப்போர் "நீ, சிதம்பரம் சென்று தில்லையம்பலத்தானை தரிசிக்கப் போகிறாயா? இது நடவாத காரியம்ளூ என, எள்ளி நகையாடினர்

இன்னும் சிலரோ, "எப்போது சிதம்பரம் செல்வதாய் உத்தேசம்?" என நையாண்டி செய்ய, அதை சிறிதும் பொருட்படுத்தாத நந்தனார், "நாளை போவேன்," என உறுதியாய் சொல்ல.... இது ஒவ்வொரு நாளும் நடந்தது!

"நாளை போவேன்," என தினந்தினம் கூறும் நந்தனை, "நாளைப் போவார்," என எல்லோரும் ஏளனம் செய்வதும் தொடர்ந்து கொண்டே இருந்தது!

உடனிருந்த ஒருவன் சொன்னான்ளூ "நந்தா.... திருப்புன்கூடரில் கூட இறைவன் உன்னை ஆலயத்திற்குள் அனுமதிக்கவில்லை, வெளியில் நின்ற உனக்கு நந்தியை விலகச் செய்து தான் தரிசனம் தந்தான். ஆனால், தில்லையம்பதியின் அமைப்பே வேறு ஆலயத்தின் உள்ளே சென்றால் தான் தரிசனம் பெற முடியும்! உனக்கு அங்கே நந்தியை விளக்கி தரிசனம் தர இறைவனாலேயே முடியாது நீயும் ஆலயத்திற்குள் செல்ல முடியாது! நிலைமை இப்படி இருக்க, நீ அந்த ஆடலரசனை காண்பது எங்ஙனம்? என இடியாய்ச் சிரிக்க.....

"அவனருளாலே அவன்தாள் வணங்கி"..... எனும் மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கேற்ப அந்த கனகசபையில் இறைவனின் திருமுகம் காண,



திருநாளைப்போவார்

எனக்கு இறைவனின் அருள் நிச்சயம் கிடைக்கும் என நம்பிக்கை கொண்டார், நாளை போவார்!

எப்படியாவது தில்லைக்கு சென்று, பதஞ்சலியும் வியாக்ரபாதரும் பெற்ற ஆனந்தத் தாண்டவனை கண்ணாரக் காண வேண்டும் என்ற பேரவா உந்தித் தள்ள, தில்லைக்கு சென்றார், நந்தன்!

அந்தணர்கள் அரசோச்சும் அந்தப் புண்ணிய தலத்திற்குள் புகக் கூட இவரால் முடியவில்லை! தில்லையின் எல்லைகளை சுற்றிச் சுற்றி வந்தார்.

தில்லையுள் செல்லும் மார்க்கம் அருகிலேனே என்று மனம் வருந்தி, மெய் சோர்ந்து ஒரு மரத்தின் அடியில் கண்ணயர்ந்தார்! சற்றே அவர் உறங்கினாலும் உள்ளமெல்லாம் தில்லைக்கூத்தனையே தியானம் செய்தது! புலையனான நான் இந்தப் புண்ணிய தலத்திற்குள் எப்படி செல்வேன் இறைவா..... என புலம்பியபடியே உறங்கினார்.

நந்தனின் கனவில் தோன்றிய தில்லைவாணன், "நந்தா.... புலையன் எனும் இப்பிறவி ஒழிய, நீ தீயூட்புகுந்து புண்ணியமைடைவாய்! அதன்பின் நீ தரிசனம் பெறும் வழி பிறக்கும்" எனக் கூறி மறைந்தார்.

இதே போல் தில்லைவாழ் அந்தணர்கள் கனவிலும் இவ்வாறே இறைவன் சொல்ல , நந்தனார் கட்டைகளைத் திரட்டி, தீயுண்டாக்கி தீயில் இறங்கினார். அந்தணர்கள் அனைவரும் அவர் தீயிலிருந்து மீண்டு வர காத்திருக்க..... நந்தனார், புலையன் என்ற பிறவி நீங்கி, புண்ணிய முனிவராய் புனர்ஜென்மம் கொண்டுவர, சகல மரியாதைகளோடு அந்தணர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, ஆனந்தக் கூத்தனை அகம் மகிழ தரிசனம் செய்தார்!

"நாளைப் போவார் என்பது திருநாளைப்போவார் என்றாகி நந்தன் நந்தன், நந்தனார் ஆகி, இன்று நாயன்மாராய் வணங்கப்படுகிறார்.





TURMERIC
& BLACK PEPPER

HI-HEALTH FORMULA

Navel Chakra & Detoxifier

Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain, heart and liver cells from ageing process

Call: 88702 88701

# எம்மை தீண்டாதீர்

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியர்

"திருநீலகண்டம்" என்று மனமார சொல்லிக் கொண்டே திருநீற்றை எடுத்து தன் நெற்றியில் விபூதியை பக்தியுடன் தரித்துக் கொண்டார் அவர். அடிக்கடி சிவநாமமான திருநீலகண்டத்தை விரும்பி உச்சரித்தவாறே அவர் இருப்பதால், அவருக்கென்று பெற்றோர் இட்ட பெயரை அனைவரும் மறந்து விட, தன் பரம்பரைத் தொழிலான மண்பாண்ட தொழிலை செவ்வனே செய்து ஈட்டி பெரும்பொருள் வரும் அவரை திருநீலகண்ட நாயனார் என்று மக்கள் அழைத்து வந்தனர்.

திருநீலகண்டர் கொண்ட சிறப்பு குணம் என்னவென்றால் தன்னை நாடி வரும் சிவனடியார்களை பலமாக உபசரித்து, அன்னமிட்டு அவர்களுக்கு தானே புதிய திருவோடுகள் செய்து கொடுப்பதை தன் நீண்ட கால வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார்.

அந்த சிவத்தொண்டருக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி எழில் கொஞ்சும் வதனமும், கட்டான இளமையும், பதவிரதா தன்மையும் கொண்டு விளங்கி, அவரது இல்லற வாழ்வின் ஜோதியாகத் திகழ்ந்தாள். தன் மனைவியின் முக அழகும் குண அழகும் எண்ணி அடிக்கடி மகிழ்வது திருநீலகண்டருக்கு பிடித்தமான ஒன்று. அவர்கள் இருவரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி பிறர் கண் படும் வகையில் மிகச் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அந்த நாயனார் மேற்கொண்டிருந்த சிவனடியார்க்கான தொண்டுகளும் சரிவர போய்க்கொண்டிருந்தது.
இந்த ஒருமித்த கருத்து கொண்டு வாழ்ந்த தம்பதிகளின் வாழ்க்கையில் அன்று ஒரு சோதனை நிகழ்ந்துவிட்டது. சிற்றின்பத்தில் சற்று ஈடுபாடு அதிகமுள்ள திருநீலகண்டர் அன்று நண்பன் ஒருவர் தூண்டுகோலால், முறைதவறி, அதுவும் "அது" தன் வாழ்க்கையின் களங்கமாகப் போகிறது என்பதை உணராமல், ஒரு கவர்ச்சிமிக்க விலைமாதான இளம்பெண் அழகில் மயங்கி தன்னை இழந்து இரவு பகுதி கடந்து, விடியல் புறப்படும் வேளையில் தன் வீடு திரும்பினார்.

தனது கணவரிடமிருந்து வீசும் புதிய நறுமண வாசனையையும், அவரது நிலையையும் கண்டு யூகித்துவிட்டு, ஐயமுற்று அதன் காரணத்தை மனைவி கேட்க, பொய் பேசத் தெரியாத திருநீலகண்டர் தான் அன்று முதன் முதலில் வேறு பரத்தையுடன் இன்பமாக இருந்ததை உளறி விட்டார்.


அக்கணமே அந்தக் கற்பரசி முடிவு செய்துவிட்டாள் - 'வேறு ஒரு பெண்ணைத் தொட்டு இன்பம் உற்ற கணவன் தன்னைத் தொட்டு இல்லற சுகம் அனுபவிக்ககூடாதென. இருந்தாலும் அதனை அந்த கற்புக்கரசி வெளிப்படையாக கூறவில்லை.

ஒருநாள் இரவு, திருநீலகண்டர் தன் வெளிப்பணிகளை முடித்து உணவுண்டு, வாய் நிறைய தாம்பூலம் போட்டுகொண்டு தன் படுக்கையறையில் உட்கார்ந்திருந்த மனைவி அருகில் சென்றார்.

கடந்த சில இரவுகளாகவே, அவர் தன் மனைவியுடன் ஆசையாகப் பழக, நெருங்கும் போதெல்லாம் அவள் அதனைத் தொடர்ந்து தவிர்த்து ஊடலுடன் கட்டிலில் அவர் கூட படுக்காமல், வெறுந்தரையில் கண் அயர்வதுமாக இருந்தாள். இன்று இரவு தனது காதல் மனைவியுடன் மகிழ்ச்சியாக

உறவு கொள்ள வேண்டுமென்ற எண்ணம் தூண்டவே, அவர் மனைவி அருகில் நெருங்கி அவளைத் தொட முயற்சித்தார்.
உடனே துடிதுடித்துப் போன அவள் "வேண்டாம்! என்னிடம் வராதீர்கள்" என படபடவென சொன்னாள். இதனால் அதிர்ச்சி அடைந்த திருநீலகண்டர் தான் அன்று ஒருநாள் புத்திகெட்டு தவறு இழைத்ததற்காக இன்று ஊடல் கொண்டு செயல்படுகிறாள் என நினைத்து, அவளது கரத்தை மீண்டும் பிடிக்க தாவிய போது, இனியும் விஷயத்தை மறைக்காது, தனது உணர்வை வெளிப்படும் வகையில் உணர்ச்சி வசத்தில் அந்த இளம்பெண் "எம்மை தீண்டாதீர்.

இது நீங்கள் அடிக்கடி உச்சரித்து மகிழும் திருநீலகண்டத்தின் மீது ஆணை" என உரத்த குரலில் கூறினாள். அவள் இதுவரை காட்டியது பொய் கோபம் என்று தவறான கணக்கை போட்டிருந்த திருநீலகண்டருக்கு, தனது தெய்வத்தின் மீது ஆணையிட்டு அவள் சொல்லவே மனதளவில் பெரிதும் அதிர்ந்து போனார்.



எப்போது மனைவி என்னைத் தீண்டாதே என்று சுட்டிக் காட்டாமல் அத்தனை பெண்களையும் உள்ளடக்கிய சொல்லான "எம்மை" என்று சொன்னதால் இனி மனதளவிலும் கூட, எந்தப் பெண்ணையும், நினைப்பதில்லை, தீண்டுவதில்லை என்று அக்கணமே முடிவு செய்துவிட்டார், அந்தத் தீவிர சிவ பக்தர். அன்று முதல் அவர் மனதில் பெண்மை உயர்ந்து போக, தெய்வீக உணர்வு அவரை முழுமையாக சூழ்ந்துகொண்டது.

ஆனால் தங்கள் உறவுநிலையை திருநீலகண்டரோ, அவரது துணைவியோ உலகிற்கு வெளிக்காட்டாது, மிக ஜாக்கிரதையாக பிறர் சந்தேகத்திற்கு சற்றும் இடங்கொடுக்காது தங்கள் இல்லறத்தை செவ்வனவே நடத்தி வந்தனர்.

திருநீலகண்டரின் சிவபக்தி நாளடைவில் பெரிதும் வளர்ந்து கொண்டே இருக்க, அவர் ஆயிரக்கணக்கான சிவனடியார்களுக்கு திருவோடு அளிப்பதும் தொடர்ந்து கொண்டே இருந்தது. பல பருவங்கள் மாறி மாறி வர ஆண்டுகள் பறந்தோடிவிட்டன.
கட்டழகும், இளமையும் கொண்டிருந்த திருநீலகண்டரும், மனைவியும், இளமையகன்று வயது முப்பால் தளர்ச்சி நிலையில் இருந்தார்கள்.

ஒருநாள் காலை, திருநீலகண்டர் தன் இல்லத்தில் ஏதோ பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் "ஓம் நமச்சிவாய" என்ற குரல் வெளியே ஒலிப்பது கேட்டு, விரைந்து அங்கு சென்றார். அங்கே ஒளிவீசும் முகத்துடன் சிவனடியாரொருவர் அழகிய திருவோடு ஏந்தி புன் சிரிப்பை வெளிப்படுத்தி நிற்பதைக் கண்டு அவர் ஆனந்தமுற்றார்.
"வரவேண்டும், வரவேண்டும்" அன்புடன் சிவனடியாரை முகமன் கூறி வீட்டினுள்ளே அவரை அழைத்துச் சென்று நல்ல விலையுயர்ந்த இருக்கையில் அமர்த்தினார். பிறகு சற்று சிரமப் பரிகாரம் செய்த சிவனடியார் தான் வரும்போது கொண்டுவந்திருந்த ஒரு திருவோடை நீலகண்டரிடம் காட்டி "அன்பனே, இந்த ஓடு மிக சிறந்த ஒன்று. இதற்கு இணை ஏதுமில்லை.

எனவே இதனை மிக கவனமாக பாதுகாத்து வருகிறேன்" என்று கூறிவிட்டு, "இதனை தற்காலிகமாக நான் ஒப்படைக்கிறேன். இது பத்திரமாக பாதுகாக்கப்பட வேண்டியது. அது உன் பொறுப்பு. நான் சொந்த வேலை காரணமாக உடனே புறப்படுகிறேன்.

நான் பிறகு உன்னை கேட்கும் போது என்னிடம் திரும்ப கொடுத்துவிடு. கவனம், என்ன" என எச்சரித்தவாறே அந்த திருவோட்டை நீலகண்டரிடம் தர, அதனை பயபக்தியுடன் அவர் பெற்றுக் கொண்டு, தன் வீட்டிலுள்ள ஒரு பாதுகாப்பான இடத்தில் அத்திருவோட்டை வைத்தார்.
மீண்டும் சிவனடியாரிடம் அவர் வந்தபோது, அடியார் இருக்கையினின்றும் எழுந்து "நாம் பிறகு சந்திப்போம். திருவோடு ஜாக்கிரதை" என அழுத்தம் கொடுத்து சொல்லி விடைபெற்றார்.

சில மாதங்கள் கடந்தன திடீரென ஒரு காலை நேரத்தில், அந்த சிவனடியார் நீலகண்டரின் இல்லத்தின் வாசலில் நின்றவாறே "ஓம் நமச்சிவாய" என்று பலத்த குரலில் சொல்ல, உள்ளே இருந்து வெளியே விரைந்து வந்தது அவர் சிவனடியாரை கண்டு மகிழ்ந்து உள்ளே அழைத்துப் போனார்.

"அப்பனே! நான் அதிக நேரம் இங்கே இருக்க இயலாது எனது திருவோட்டை உன்னிடம் இருந்து திரும்பப் பெற்றுச் செல்லவே இங்கே வந்துள்ளேன்" என பட்டென விஷயத்தைச் சொல்ல இதோ வந்துவிட்டேன்" எனக் கூறிய படியே, அவர் முன்பு தான் சிவனடியாரின் திருவோடு வைத்திருந்த இடத்திற்கு விரைந்தார்.
என்ன துரதிர்ஷ்டம் வைத்த இடத்தில் அந்த திருவோடு காணப்படவில்லை இங்குதானே பத்திரமாக இருந்தது" என குழம்பியவாறே, வீட்டின் பல பகுதிகளுக்கு ஓடோடிச் சென்று தேடினார். ஆனால் அது கிடைக்கவில்லை.

வீட்டில் உள்ளோரை விசாரித்தும், அவர்கள் அதை தாங்கள் பார்த்ததே இல்லையே என கை விரித்தனர். திகைத்து நின்ற நீலகண்டரை "ஓம் நமச்சிவாய" என விழித்து இரைச்சல் போட்டுக் கூப்பிட்டார் சிவனடியார்.

தன்னிடம் வெறுங்கையுடனும், மெய் விதிர்த்த நிலையிலும் வந்து நின்ற நீலகண்டரை ஏற இறங்கப் பார்த்த சிவனடியார் "எங்கே அப்பனே! என் திருவோடு. திருதிருவென விழிப்பதின் மர்மமென்ன" என அதட்டிக் கேட்டார். "ஐயனே! தங்கள் திருவோடு எங்கோ காணாமல் போய்விட்டது.

அதற்காக தாங்கள் என்னை மன்னித்தருள்க. அந்த பழைய ஓட்டிற்குப் பதிலாக இப்போதே என் கையால் புதிய திருவோடை உருவாக்கி தருகிறேன்" என பணிவுடன் கூறினார். "உன் புது திருவோடு யாருக்கு வேண்டும்?
அது பொன்னாலேயே செய்து தரப்பட்டாலும் எனக்குத் தேவையில்லை. எனது திருவோட்டை எவ்வித தாமதமின்றி திரும்பக் கொடுக்கும் வழியைப் பார்" எனக் கண்டிப்புடன் ஆணையிட்டார். "ஐயா! நிஜமாகவே அது காணவில்லை" என இடைமறித்து திருநீலகண்டர் கூற, அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த சிவனடியார் "அது நல்ல மகிமை பொருந்திய திருவோடு என முன்பு நான் சொன்னதைக் கேட்டு, அதை வேண்டுமென்றே திருடி நீ வைத்துள்ளாய்.

இதற்காக நான் அரசனிடம் வழக்கு தொடர்ந்து உன்னிடமிருந்து அத்திருவோட்டை பெற்றுவிடுவேன்" என அச்சுறுத்திச் சொன்னார். அதற்குள் அங்கு கூடிவிட்ட பொதுமக்கள் இந்தக் காட்சியைக் கண்டு பலவாறாகப் பேச தலைப்பட்டனர். இதனால் அவமானமுற்ற நீலகண்டர் "ஐயனே! நான் திருடனல்ல! இதை எப்படி நிரூபிப்பது என தாங்கள் வழிகாட்டினால், அதன்படி நடக்க சித்தமாக உள்ளேன்" என கண்ணீர்ப் பெருக்குடன் கேவிச் சொன்னார். "சரி! இதற்கு ஒரு தீர்வு தருகின்றேன். நீ உனது புதல்வனின் கையைப் பிடித்துக் கொண்டு, ஆலயத் திருக்குளத்தில் மூழ்கி கொடுத்த திருவோடு காணாமற்போனது உண்மையே என சத்தியம் செய்து கொடுத்தால் நீர் சொல்வது உண்மை என ஏற்றுக் கொள்வேன்" என உறுதியுடன் சிவனடியார் கூற, தயங்கி நின்றார் குற்றஞ்சாட்டப்பட்டவர். "என்ன தயக்கம்?"

சிவனடியார் அதட்டிக் கேட்கவே, திருநீலகண்டர், எனக்கு புத்திர பாக்கியம் இல்லையே என குற்ற உணர்வுடன் பதிலளித்தார்.. "அதனாலென்ன உனது மனைவியின் கைப்பற்றி குளத்தில் இறங்கலாமே என அதற்கு ஒரு தீர்வு சொல்ல, வேறு வழியின்றி உலகினர் இதுவரை அறியாத விஷயத்தைச் சொன்னார் அந்த சிவத்தொண்டர். "ஐயா! நானும் என் மனைவியும் செய்துகொண்ட ஒரு சபதப்படி, நான் அவள் கரத்தை தீண்டும் நிலையில் இல்லை" என அவர் கூறியும், "ஓஹோ! நீ எந்த முடிவிற்கும் கட்டுப்படாத வகையில், ஏதேதோ சால் சாப்பு சொல்கிறாய்! இனி இந்த விவகாரத்தை தில்லைவாழ் அந்தனர் திருச்சபைக்கு ஒரு வழக்காகவே எடுத்துச் செல்ல போகிறேன், புறப்படு என்னுடன்" என சினத்துடன் கூறி, திருநீலகண்டரின் கையை தரதரவென பிடித்து அழைத்துச் சென்றார் சிவனடியார். என்ன இப்படி ஆகிவிட்டதே என்ற வேதனையுடன் திருநீலகண்டரின் மனைவி அவர்களை பின்பற்ற, அங்கிருந்த பொதுமக்களும் எப்படியாவது என்னதான் நடக்கிறது என்று ஆவலுடன் பின்தொடர்ந்தனர்.
தில்லைவாழ் அந்தணர் சபை கூடியது. தன் வழக்கின் வாதத்தை சிவனடியார் அவையோருக்கு விளக்கி, எப்படியாவது என் திருவோட்டை எனக்கு திரும்ப வர செய்வதுடன், அதனை திருடி மறைத்த நீலகண்டருக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். தன் தரப்பு வாதத்தின் போது நீலகண்டர் தன்னிடம் சிவனடியார் திருவோடு அளித்ததை ஒப்புக்கொண்டு, அது திருடு போய்விட்டது என்பதை எடுத்துச் சொன்னார்.

அப்போது இரு தரப்பு வாதங்களையும் கேட்டுக் கொண்ட அந்த நியாயப் பேரவை, "உம்மீது உள்ள பழியைப் போக்கிக் கொள்ள சிவனடியார் கூறிய யோசனைப்படி நீர் குளத்தில் மனைவியின் கரத்தை பிடித்து ஸ்நானம் புரிந்து சத்தியம் செய்வதே சரி" என தீர்ப்பு வழங்கியது. அதற்கு ஒத்துக்கொண்ட திரு நீலகண்டர் தனது மனைவியை அருகே கூப்பிட்டு ஒரு சிறிய மூங்கில் துண்டைத் தந்து மறுமுனையை தான் பிடித்துக்கொண்டு உள்ளுர் திருக்குளத்தில் அனைவரின் முன்னிலையிலும் முழுகத் தயாரானபோது, படாரென சிவனடியார் குறுக்கிட்டு, "அவர் மனைவியின் கையை நேரடியாக பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி எழுந்து சத்தியம் செய்தால் மட்டுமே என்னால் ஏற்க இயலும்" என தில்லைவாழ் அந்தணர் திருகூட்டத்தினரிடம் உறுதியாகத் தெரிவித்தார். அப்போது வேறு வழியின்றி, தானும்தனது மனைவியும் செய்து கொண்ட உடன்பாடு குறித்து உலகம் அறிய, அப்போது திருநீலகண்டர் வெளிப்படுத்தும்படி ஆகிவிட்டது.

இப்போது கணவனும், மனைவியும் தாங்கள் தினமும் வழிபடும் சிவனைத் துதித்து ஆலய திருக்குளத்தில் அங்கு கூடியிருந்த மக்கள் ஆச்சரியப்படும் வகையில் மூழ்கி ஒரு முங்கு போட்டு எழுந்திருக்கையில், அங்கு கூடியிருந்த மக்கள் ஆச்சரியப்படும் வகையில் தங்கள் முதுமை அறவே நீங்கப் பெற்ற நிலையில் திருநீலகண்டரும், அவரது துணைவியும் கட்டிளங்காளையாகவும், அழகிய இளம் பெண்ணாகவும் முறையே மாறி புதுப்பொலிவுடன் காட்சியளித்தார்கள். அதேசமயம் அங்கே அனைத்துக்கும் காரணமாகவிருந்த சிவனடியார் எங்கோ மாயமாகி விட்டார்.

அப்போது வானில் பேரொலி ஒன்று கேட்கவே, கூடியிருந்த அனைவரும் அண்ணாந்து பார்க்கையில் மிக்க ஒளி பின்னணியாக அடைய சிவனடியார் திருக்கோலத்தில் வந்து திருநீலகண்டரை சோதித்த சிவபிரான் ரிஷப வாகனத்தில் உமைதேவியுடன் காட்சியளித்து எம் தொண்டனின் சிவ பக்தியை உலகிற்கு உணர்த்தவும், எம்மீது ஆணையிட்டு நன்னெறியுடன் வாழ்ந்து வந்ததை அனைவரும் அறிந்து கொள்ளவுமே இந்த திருவோட்டு திருவிளையாடல் இவ்வூரில் அரங்கேறியது.
இனி இந்த சிவபக்தி தம்பதிகள் இதே கோலத்துடன் கயிலையில் இடம்பெறுவார்கள்" என அருளி மறைந்தார். அனைவரும் திருநீலகண்டரின் புகழை புகழ்ந்துரைக்க, வானோர் பூமாரி பொழிந்தனர்.

"ஸ்ரீ கண்டம் புஜ கேந்த்ரபூஷம் நாகாஜினம்
ராஜ கலா களாபம்
கௌரீச்வரம் தேவ முனீந்த்ர ஸேவ்யம்
தேவ்யம் பஜே கிரிஜாதி நாதம்!
--பஜப ராஜீயம் நூல் ஸ்லோகம்.

# பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள்

~ ரா. பன்னீர்செல்வம்

மகான்கள் பிறப்பெடுப்பதின் நோக்கமே மனித இனத்தை உய்விக்கத் தான். மனிதர்களுக்கு உண்டாகக்கூடிய மனப்பிணி மற்றும் உடற் பிணியை போக்கும் உபாயங்களை அறிந்து, மாந்தரை நல்வழிப்படுத்துவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டவர்கள் மகான்கள்! அப்படிப்பட்ட மகான்கள் ஐக்கியமான பிறகும்கூட, இம்மண்ணுலகில் தன் ஆன்ம சக்தியால் மக்களுக்கு அரும்பெரும் கருணையினை இன்றளவும் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்

அப்படிப்பட்ட மகான்களில் ஒருவர் தான், கடந்த நூற்றாண்டில் தென்னகத்தில் வாழ்ந்து, தன் ஆன்ம திடத்தால் மக்களின் துயர் போக்கி, பற்பல இறைப் பணிகளை ஆற்றிய பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் என்னும் அரிய சித்தர் ஆவார். யார் இவர்?.

இவர் ஆற்றிய தொண்டுகள் என்ன? செய்த இறைப் பணிகள் என்னென்ன? செய்து காட்டிய சித்து வேலைகள் என்ன? இவர் எங்கிருந்து வந்தார்? என்பதை அறிவோம்.

ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள உருவிகொண்டா என்கிற கிராமத்தில் கந்தசாமி அய்யருக்கும் அர்த்தநாரி அம்மையாருக்கும் முற்பிறவி தவப்பயனாய் அவதரித்தவர் தான் நமது ராமலிங்க சுவாமிகள்.

ஆந்திர மாநிலத்தில் அவதரித்த இந்த மகான் தமிழ்நாட்டில் வந்திருந்து புகழ் பெற்றது எப்படி?... தன்னுடைய தொழில் நிமித்தமாக தமிழகத்தில் உள்ள கோவையை அடுத்துள்ள மஞ்சம் பாளையம் என்கிற கிராமத்திற்கு வந்தது கந்தசாமி அய்யரின் குடும்பம்.

கிராமத்தில் உள்ள வீடுகளில் நல்ல காரியங்களை வைதீக முறையில் நடத்தித் தந்தார். அதோடு, திண்ணைப் பள்ளிக்கூடமும் நடத்தி, கிராமத்து சிறுவர்களுக்கு கல்வி அறிவு புகட்டும் கருணை உள்ளமும் கொண்டிருந்தார்.

இப்படி வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்த நிலையில் கந்தசுவாமி அய்யரும் அர்த்தநாரி அம்மையும் அடுத்தடுத்து இறைவனடி சேர்ந்தனர். பெற்றோர் இருவரும் மறைந்தது சிறுவனாக இருந்த ராமலிங்கம் மனதில் வெறுமையை உண்டாக்க, அந்த வெறுமையே பிரபஞ்சத்தின் தன்மையை அவரது மனதில்



தெளிவாகக் காட்ட, சிறுவனாக இருந்த ராமலிங்கம் அந்த வயதிலேயே துறவறம் மேற்கொண்டார்.

இந்நிலையில், தான் அவதரித்த ஆந்திர மாநிலம் நோக்கி, அவரது கால்கள் நடை போட்டன. ஆந்திராவின் பெல்லாரியை அடுத்திருந்த செள்ளகுரிக்கி என்னும் இடத்தில் வசித்த எரிதாதா சுவாமிகள் என்கிற மகான், இவரது உள்ளத்தை ஆக்கிரமிக்க, தானாகவே ராமலிங்கத்தின் கால்கள் அந்த மகானின் இருப்பிடம் நோக்கி நடை போட்டன.

இவருக்கான குருவை இறைவன் அடையாளம் காட்டினான் என்பதே உண்மையானது. ஆம் எரிதாதா சுவாமிகளின் சீடரானார், ராமலிங்கம் இவருடைய இறைபக்தி, தெளிந்த மனம், தன்னலம் கருதாத பண்பு இவற்றை அறிந்த குருவான எரிதாதா சுவாமிகள், ராமலிங்கத்திற்கு ஞானோபதேசம் செய்து, அவரை தென்னாடு செல்லுமாறு பணித்தார் தன் குருவின் கட்டளையை மதித்து கும்பகோணம் அருகிலுள்ள பாடகச்சேரி என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார், ராமலிங்கம்

இந்த பாடகச்சேரியிலேயே மடம் அமைத்து தன்னுடைய தன்னலமற்ற பணிகளை நீண்டகாலம் செய்துவந்தார். இதனாலேயே இவருடைய பெயரில் பாடகச்சேரியும் சேர்ந்துகொண்டு "பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் ஆனார்.
இந்த காலகட்டத்தில்தான் சுவாமிகள், தனது ஆன்ம சக்தியால் பலரது பிணிகளை தன் கருணைப் பார்வையால் தீர்த்து வைத்தார். பிரச்சினை தாளாமல் மனம் வருந்தி இவரிடம் வந்த பலருக்கு, அந்த பிரச்சினைகளைத் தீர்த்து நல்வாழ்வினை அருளினார். இறந்துபோய் பாடையில் கிடத்தப்பட்ட சிலரைக் கூட, சிறிதளவு விபூதி பூசி, பிழைக்க வைத்து மறுவாழ்வு கொடுத்த அற்புத செயல்களையும் நிகழ்த்திக் காட்டினார்.

எவரிடத்தும் எதற்காகவும் கையேந்தி நிற்காத இந்த மகானின் தன்னலமற்ற சேவையை இப்பகுதி மக்கள் அனைவரும் நன்கறிந்தனர். இவர் ஒரு மகான் என்பதை உணர்ந்து அவருக்கு பக்தி செலுத்தத் தொடங்கினர்.

எரிதாதா சுவாமிகளின் சீடராய் இங்கு வந்த சுவாமிகளை வடலூர் ராமலிங்க சுவாமிகள் சூட்சும வடிவில் வந்து ஆட்கொண்டார் என்பது ஆன்மீக உண்மை. இதனால்தான் இவர், தூய வெண்மை உடையுடன் காட்சி தந்து பற்பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார். அன்று பலரும் இவரைப் பார்த்து, வடலூர் ராமலிங்க சுவாமிகளே இவர் உருவில் வந்து இன்ன அருள் புரிவதாக எண்ணினர்!

இந்த நேரத்தில் தான் நேபாள மன்னரும் பைரவ உபாசகருமான ராஜாராம் சுவாமிகள் நமது மகானுக்கு பைரவர் உபாசனை செய்து வைத்தார். இதனைக் கொண்டே பாடகச்சேரியில் சுவாமிகள் பைரவ பூஜை செய்யலானார்.

இந்த பூஜைக்காக முதல் நாளே, சுற்றிலும் உள்ள நான்கைந்து கிராமங்களுக்கு சென்று அங்குள்ள நாய்களை எல்லாம் அழைப்பாராம். இது, பார்ப்போருக்கு ஏளனமாக தெரியும். ஆனால், நமது கண்களுக்கு நாயாக தெரியும் அவை, நம் சுவாமிகளின் கண்களுக்கு தேவர்களாகவும் தெய்வங்களாகவும் தெரிவார்களாம்.

பைரவ பூஜைக்கு நாளை வந்து விடவேண்டும் என்று அழைப்பு விடுத்த சுவாமிகள், பாடகச்சேரிக்கு வந்து சில சமையல்காரர்களை அழைத்து சுமார் முன்னூறு பேர் நாளைக்கு பைரவ பூஜைக்கு வருவார்கள்! எல்லோருக்கும் உணவு சமைக்க வேண்டும் என்பாராம்.

"முன்னூறு பேருக்கு சாப்பாடா? பொட்டல் காடாய் இருக்கும் இந்த பகுதியில் பூஜைக்கு முன்னூறு பேர் எப்படி வருவார்கள்? இது என்ன வேடிக்கையாய் உள்ளதே". என சமையல்காரர்கள் பிரமித்துப் போய், தங்கள் பணியை செய்யத் துவங்குவார்களாம்.
ஏகப்பட்ட காய்கறிகள், அரிசி என திருமண விழாவிற்கு சமைப்பது போல் வடை, பாயசத்தோடு சமைப்பார்களாம். மறுநாள் அதாவது பைரவ பூஜையன்று அந்த பகுதியில் ஒருவர் கூட எட்டிப் பார்க்காத நிலையில், இலைகளைப் போட்டு, பரிமாற சொல்வாராம் சுவாமிகள்! பணியாளர்கள் வாழை இலையைப் போட்டு, உணவுப் பதார்த்தங்களை வைத்து முடிக்க, சுவாமிகள் தனது கையில் வைத்திருக்கும் சிறு பிரம்பால் தரையில் தட்டி, நமச்சிவாய மந்திரம் சொல்வாராம். உடனே, கண நேரத்தில் எங்கிருந்து வந்தது? என

எவராலும் யூகிக்க முடியாத அளவிற்கு நூற்றுக்கணக்கான நாய்கள் ஓடிவந்து, அந்த இலைகளுக்கு முன்னால் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்து விடுமாம். மற்றவர் கண்களுக்கு நாயாக தெரிந்தாலும் சுவாமிகளின் கண்களுக்கு மனிதர்களாகவே தெரியுமாம். இந்த பைரவ பூஜையை சுவாமிகள் பலகாலம் நடத்தி வந்தாராம். வெட்டாறுக்கு அருகில் ஒரு வேல் நட்டுவைத்து முருகன் கோவிலை அமைத்து சுவாமி வழிபட்டு வந்தார். அந்த ஊரில் போக்கிரி இளைஞர்கள் சிலர், தவறான செயல்களில் ஈடுபட்டு வந்தனர். சுவாமிகள், அந்த இளைஞர்களை அழைத்து கண்டித்தார்.

இதைத்தாளாத அந்த இளைஞர்கள், இவரை வெட்டி வீழ்த்தி விட, வேண்டும் என்ற முடிவோடு, சுவாமிகள் படுத்திருந்த இடத்திற்கு வர, அந்த நேரத்தில் சுவாமிகள், தான் அறிந்திருந்த நவகண்டம் என்னும் சித்தினைப் பயன்படுத்தி கை வேறு, கால் வேறாக ஒன்பது துண்டுகளாய் கிடந்திருக்கிறார். இது நவகண்டம் என்னும் சித்து வேலை என்பதை அறியாத அந்த இளைஞர்கள், " வேறு யாரோ வெட்டி விட்டார்கள் என திரும்பிச் செல்ல, அவர்களின் எதிரே வந்து சிரிக்க.... இளைஞர்கள் மிரண்டு ஓடி விட்டனராம்.
இதன் பின் கும்பகோணம் வந்த சுவாமிகள் அங்குள்ள முத்து மண்டபத்திலேயே தங்கி விட்டாராம். நோய் என்று வரும் அனைவருக்கும் சிறிதளவு விபூதி பூசி, "ஆபத் சகாயம்" என்று சொல்வாராம். அந்த நொடியே வியாதிகள் பறந்து போனதைப் பார்த்து பக்தர்கள் பிரம்மிப்படைந்துள்ளனர்.

இப்படிப்பட்ட மகான் கும்பகோணத்தில் உள்ள இந்த முத்து மண்டபத்தில் தான் ஜீவ முக்தி அடைய விரும்பினாராம். ஆனால், சென்னை பக்தர் ஒருவரின் வேண்டுகோளை ஏற்று சென்னைக்கு வந்தவர், திருவொற்றியூரில் ஜீவ சமாதி அடைந்தார். இன்றும் அந்த ஜீவ சமாதிக்கு வரும் பக்தர்களுக்கு நன்மைகளை அருளிக் கொண்டிருக்கிறார், சுவாமிகள்

இதைப்போலவே, கும்பகோணம் முத்துமண்டபத்தில் இவரது ஆன்ம சக்தி இன்றளவும் பற்பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பதால் இதையும் ஜீவசமாதியாகவே எண்ணி வணங்கி, நலம் பெறும் பக்தர்கள் எண்ணிலடங்கார்.

இப்படி, எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தி, சாமானியர் நலமுடன் வாழ வழி செய்த நம் ராமலிங்க சுவாமிகளின் ஜீவசமாதியை சென்னை, திருவொற்றியூரிலும் கும்பகோணம் முத்து மண்டபத்திலும் சென்று வணங்குவோம், நல்லருள் பெறுவோம்!



# இந்த பிள்ளை யார்?

~ கீதாமணி

பல தலங்களில் திருநாமங்கொண்டு பக்தர்களுக்கு அருளி வருகிறார், நம் பிள்ளையார். அவைகளில் ஒரு சில வாக இவை உள்ளன.

## மணிகட்டிப் பிள்ளையார்

கயிலை மலையில் ஒரு சமயம் சிவன் மும்மரமாக நடனம் செய்து கொண்டிருக்கும் பொழுது, அவரது காலிலிருந்து மணி கழன்று தரையில் விழுந்து விட்டது. அதனைக் கண்டுவிட்ட பிள்ளையார் அதனை எடுத்து தனது தந்தையின் காலில் கட்டி விட்டாராம்.
"மணிகட்டிப் பிள்ளையார்" என்ற பெயரில் விநாயகர் குடிகொண்டு பூஜிக்கப்படும் அவர் கும்பகோணத்தை அடுத்த ஒப்பிலியப்பன் கோயில் தலத்திற்கு தென்கிழக்குப் பகுதியில் உள்ள " தண்டந்தோட்ட ஊரில் உள்ள ஆலயத்தில் கொண்டாடப்படுகிறார்.

## சர்ப்ப விநாயகர்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள செம்படா பாளையப் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் தன்னைப் பூஜிக்கும் கண்பார்வை குறைந்தோர்க்கு அருளும் இறைவனாக" சர்ப்ப விநாயகர்" என்ற பெயரில் குடிகொண்டுள்ளார்.
ஐந்து தலை நாகம் குடைபிடிக்க பொலிவோடு காட்சித் தரும் பிள்ளையாருக்கு கண்கொடுத்த விநாயகர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு.
ஈரோடு மாவட்ட பவானி அருகேயுள்ள குறிச்சியிலிருந்து சுமார் 5 கி. மீ. தூரத்தில் செம்படா பாளைய சிற்றூர் உள்ளது.

## மூடு கணபதி

சப்பையாக அமைந்த துதிக்கை கொண்ட இந்த கணபதி வழக்கமான மூஷிக வாகனம் இன்றி நான்கு கரங்களுடன் திருக்காட்சி அளிக்கிறார். மகுடம் சூடிய தோற்றம் தரும் கணபதி தன் பின் வலக்கையில் நெற்கதிரை ஏந்தியும், இடது கையில் மோதகமும் வைத்துள்ளார்.
அவருடைய முன் இடது கையை காலில் வைத்துள்ளார். பிரம்ம ரூப கணபதி என்ற பெயரும் கொண்ட இவர் பிரபல சுசீந்திரம் சிவாலயத்தில் எழுந்தருளி அனுகிரகித்து வருகிறார்.
விநாயக சதுர்த்தி திருநாளன்று கொழுக்கட்டைகள் பலவற்றை கொண்டு பிள்ளையாரை மூடிவைத்து பக்தர்கள் வழிபடுவதால் "மூடு கணபதி" யாகிவிட்டார்.

## குழந்தைப் பிள்ளையார்

பிரசித்தி பெற்ற, சரஸ்வதி தேதி குடிகொண்ட கூத்தனூர் தல ஆலயத்தில் உள்ள பிரகாரத்தில் அமைந்த ஒரு தூணில் நடனமாடிய நிலையில் காணப்படும் "குழந்தைப் பிள்ளையாரை" தரிசிக்கலாம்.
மகப்பேறு வேண்டுவோருக்கு இப் பிள்ளையார் அருள்வதால் அது காரணப்பெயர். கூத்தனூர் தஞ்சாவூர் பீபமுள்ளது.

## நவக்கிரக விநாயகர்

குஞ்சாலி அம்மன் திருக்கோயிலின் மேற்குப்பகுதி பிரகாரத்தில் பிரம்மாண்ட வடிவிலே தோற்றம் தரும் இந்த விநாயகரின் மேனி முழுமையும் நவக்கிரகங்கள்
செதுக்கப்பட்டுள்ளன.
இந்தப் பிள்ளையாரை அபிஷேகித்து பூஜித்தால் தங்களை பிடித்த கிரக தோஷங்கள் நீங்கிவிடும் என்பது நம்பிக்கை.
திண்டுக்கல்லிருந்து சுமார் 5 கி. மீ. தூரத்தில் உள்ள நல்லாம் பட்டி சிற்றூரில் அ/மி குஞ்சாலி அம்மன் ஆலயமுள்ளது.

## இரட்டைப் பிள்ளையார்

கீழ் கபிஸ்தலம் என்ற தலம் தஞ்சை மாவட்ட பாபநாசம் நகரிலிருந்து சுமார் 2 கி. மீ. தூரத்தில் உள்ளது. இங்கு அமைந்த ஏகாம்பரேசுவர திருக்கோயிலின் அர்த்த மண்டப நுழைவாயிலின் இடதுபுறம் எழுந்தருளியுள்ளார் இரட்டைப் பிள்ளையார்.

வழக்குகளை தீர்த்து வைக்கும் இப்பிள்ளையார், தனது திரு உருவுக்கு பட்டுத் துணி சார்த்தி வழிப்படும் கன்னிப்பெண்களுக்கு திருமண யோகம் அருள்வார் எனப்படுகிறது.

### திருப்பணி விநாயகர்

பல 1000 வருடங்களுக்கும் முற்பட்ட சிறு ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இந்த விநாயகர் கொண்டது காரணப் பெயரே.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயில் கட்டுவதற்கு முன்பாக, முதல் ஆலய கல் இந்தப் பிள்ளை யார் ஆலயத்தில் வைத்து பூஜிக்கப்பட்டு பின்பு கோயில் ஆலயப் பணிகள் துவங்கியத்து

இப்பொழுதும் கோயில் புதிதாக கட்ட தொடங்கினாலும், புனரமைப்பு செய்ய வேண்டியிருந்தாலும் இந்த "திருப்பணி விநாயகரை பூஜித்து வழிபடுகிறார்கள். சொந்த வீடு கட்ட இயலாதவர்கள், இவரை வேண்டி பூஜித்தால் அந்த வாய்ப்புக் கிட்டும் என பக்தர்கள் நம்புகிறார்கள்.

திருப்பணி விநாயகர் ஆலயம் சிதம்பரம் நகரின் வடக்கு ரத வீதியில் வடக்கு சன்னிதி எதிர்புறம் அமைந்துள்ளது.

### மானுட வடிவு விநாயகர்

மனித முகங்கொண்டும், நான்கு கரங்கள் பூண்டும், பத்மம், அங்குசம் தரித்தும் காணப்படும் வித்தியாச தோற்றங் படைத்த, ஆதி விநாயகரை தரிசிக்க நாம் போக வேண்டிய ஆலயம், திருச்சி நகர கீழ்ப்புலிவார் சாலையில் உள்ள நன்றுடையான் திருக்கோயில்.



1000 ஆண்டுகளுக்கும் மேல் தொன்மை கொண்ட ஆதி விநாயகருக்கு வியாழக்கிழமை தினத்தில் மாதுளம் பழத்தால் அர்ச்சனை புரிய கடன் பிரச்சினைகள் தீரவும், வழக்குகளில் வெற்றி கிட்டவும் ஆன பலன்கள் கிட்டும் எனப்படுகிறது.

காஞ்சி மகான் மகாப்பெரியவர்கள் இவ் வாலய நந்தி மண்டபத்தில் சில காலம் தங்கி ஆதி விநாயகரைத் தொடர்ந்து ஆராதனை புரிந்து ஆனந்தப்பட்டாராம்

# பொங்கு சனீஸ்வரர்

~ ரா.பன்னீர் செல்வம்

ஏழரைச் சனி என்றால் என்னவென்று நம் அனைவருக்குமே தெரியும். நம் ராசிக்கு முன் ராசியில் இரண்டரை ஆண்டும் நம் ராசியில் இரண்டரை ஆண்டும் நமது ராசிக்கு அடுத்துள்ள ராசியில் இரண்டரை ஆண்டும் சனிக்கிரகம் சஞ்சரிக்கக் கூடிய இந்த ஏழரை ஆண்டுக் காலமே ஏழரைச் சனி எனப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனின் ஜாதகப் படி, வாழ்நாளில் மூன்று சுற்றுகளாய் இந்த ஏழரைச் சனி வருவதுண்டு யாரோ வெகுசிலர் தான், திடமான ஆயுளால் நான்காம் சுற்று ஏழரைச் சனியை வாழ்நாளில் காண்பார்கள். அவர்கள் பாக்கியவான்கள்! நாம் எல்லோரது வாழ்விலும் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய மூன்று சுற்று ஏழரைச் சனி பற்றி பாப்போம்

ஒவ்வொருவர் வாழ்விலும் வருகின்ற முதல் சுற்றான ஏழரைச் சனி, மங்குசனி எனப்படும். அந்த காலகட்டம் வேதனைகளும் சோதனைகளும் நிறைந்து காணப்படும். இந்த காலத்தில் நிறைய கஷ்டங்களை கொடுக்கும் சனி பகவான் மனிதனை பண்படுத்தி, பக்குவப்படுத்துகிறார். சிலருக்கு, ஜனன காலத்தின் படி இந்த முதல் சுற்று மிகவும் சிறுவயதிலேயே வந்துவிட்டால் அவர்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டார்கள்.

அடுத்து, இரண்டாம் சுற்று ஏழரைச் சனி என்பது முப்பது வயதுக்கு மேல் வரக் கூடியதாகும். இதற்கு பொங்குசனி என்று பெயர். முதல் சுற்றில் ஏற்பட்ட பாதிப்புகள் இந்த சுற்றில் இருக்காது மாறாக, இழந்ததையெல்லாம் பெறுகின்ற காலம் என்று இந்த இரண்டாம் சுற்றான பொங்குசனி காலத்தை சொல்வார்கள். முன்னர் பட்ட கடன்கள் தீர்ந்து, ஏற்பட்ட பிரச்சனைகள் அகன்று, மகிழ்ச்சி பொங்கும் காலம் என்பதால் இதனை பொங்கு சனி காலம் என்று ஜோதிட நூல்கள் புகழ்கின்றன.

மூன்றாவது சுற்றான ஏழரைச் சனியை மாரகசனி காலம் என்பர். இந்த மூன்றாம் சுற்று வருகின்ற காலம் சுமார் அறுபது வயதில் என்பதால் மனிதன் இந்த காலகட்டத்தில் மரணத்தைத் தழுவுகின்றான். ஏழரைச் சனியில் ஏற்றத்தைத் தருகின்ற காலம் என்பது, இரண்டாம் சுற்றான பொங்கு சனியின் காலமே!. இந்த பொங்கு சனியால் நமக்கு ஏற்றங்கள் அனைத்தும் தடை படாமல் இருக்க, "திருக்கொள்ளிக்காடு" என்னும் தலத்தில் அருள் புரிகின்ற சனீஸ்வர பகவானை ஒரு முறை சென்று தரிசனம் செய்வது நலம் தரும்.

திருவாரூரிலிருந்து திருதுறைப்பூண்டி செல்லும் வழியில் கச்சனம் நால்ரோடிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் சென்றால், இயற்கை வனப்புமிக்க - வயல் வெளிகள் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது அக்னிபுரீஸ்வரர் ஆலயம் ஆண்டவன் இங்கே அக்னி வடிவாக விளங்குகிறார். அம்பாளின் திரு நாமம் பஞ்சினும் மெல்லடியாள்!

பஞ்சும் நெருப்பும் அருகருகே இருந்தால் நன்மையாமோ?.... இங்கே பஞ்சும் நெருப்பும் ....அதாவது அம்பாளும் ஆண்டவனும் அருகருகே இருந்து அழியாத இன்பத்தை நல்குகிறார்கள். அப்படிப்பட்ட புனிதத் தலம் இது

இங்கே சனிபகவான், பொங்கு சனீஸ்வரராக தனி சன்னிதியில் அருள் பாலிக்கிறார். இரண்டாம் சுற்று ஏழரைச் சனி நடப்பவர்கள் இந்த ஆலயம் சென்று இறைவன், இறைவியை வணங்கி, சனீஸ்வரருக்கு வஸ்திரம் சார்த்தி, அர்ச்சனை செய்வதால் எப்படிப்பட்ட தொல்லைகளும் விலகி, செல்வமும் மகிழ்ச்சியும் பொங்கி வரும். சனிபகவானுக்கு அர்ச்சனை செய்த விபூதி இங்கே கிடைக்கும்! அதனை வாங்கி வந்து

நெற்றியில் இட்டுக் கொள்ள சகல வளங்களும் பொங்கிப் பெருகும் என்பது நியதி

இங்கே, சனிபகவானின் சன்னிதிக்கு நேர் எதிரில் அவரது குருவான பைரவரின் சன்னதி அமைந்துள்ளது.

அருகில் நவக்கிரக சன்னதி, நவக்கிரங்கள் இங்கே "ப" வடிவில் அமைந்திருப்பது சிறப்பாகும். எனவே, ஏழரைச் சனியில் இரண்டாம் சுற்று நடப்பவர்கள் திருக்கொள்ளிக்காடு சென்று, அந்த பொங்கு சனீஸ்வரன் தரிசனம் பெற்று நல்வாழ்வு பெறலாம்.

# மங்கள சனீஸ்வரர்

கும்பகோணத்தை அடுத்துள்ள திருநறையூர் என்னும் தலத்தில் உள்ள இராமநாதீஸ்வர் ஆலயத்தில் ஒரு மாபெரும் அதிசயம் உள்ளது.

இங்கு சனீஸ்வரனுக்கு தனி சன்னிதி உள்ளது. சன்னதி தான் தனி சன்னிதியே தவிர, இங்கு இருக்கும் சனீஸ்வரன் தன் மனைவி, குளிகன், மாந்தி என்னும் இரண்டு மகன்களோடு குடும்ப சகிதமாய் தரிசனம் தருகிறார்.

மனைவி, மக்களோடு இருக்கும் ஒருவன் யாருக்கும் தீங்கு செய்ய மாட்டான் என்பது இயல்பு. எனவே, மனைவி மக்களோடு வீற்றிருக்கும் இந்த சனி பகவான் மங்களங்களையே அருள்வார்! இங்கு சென்று தரிசனம் செய்வதால் சனி தோஷங்கள் எவ்வித பாதிப்பையும் தராது என்பது திண்ணம்.



# செப்டம்பர் – ராசி பலன் – 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்




குடும்பத்தில் உள்ளவர்களிடம் மதிப்பும் மரியாதையும் கூடும், நல்லுறவு நீடிக்கும். வாழ்க்கைத் துணை மற்றும் அவர்கள் வீட்டாரிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். வாக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும். எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். தன நிலை குறித்து எவ்விதமான பதட்ட நிலையும் இருக்காது. நீங்கள் வீட்டு மராமத்துப் பணிக்காக பணத்தை செலவு செய்வீர்கள். குழந்தைகளின் கல்விக்காக கடன் வாங்குவீர்கள். வீட்டிற்கு தேவையான வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் மரச் சாமான்களை வாங்குவீர்கள். இந்த மாதம் நீங்கள் நிதிநிலையை திறமையுடன் கையாளுவீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவீர்கள்.

சுயதொழில் செய்பவர்கள் நல்ல லாபங்களை அடையக்கூடிய வாய்ப்பு உள்ளது. புதிய தொழில் ஒப்பந்தங்கள் மூலம் தன நிலையில் ஏற்றம் உண்டாகும்.

இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சவால் மிக்கதாக இருக்கும். சிறு சிறு உடல் உபாதைகள் வந்து போகும். அலட்சியப்படுத்தாமல் மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறப்பு.

மாணவர்கள் படிப்பில் சில தடைகளை சந்திப்பார்கள். கடின உழைப்பும் விடா முயற்சியும் மேற்கொள்வதன் மூலம் மாணவர்கள் வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
3, 8, 9, 10, 16, 23, 27.
**அசுப நாட்கள்:**
12, 13, 14, 24.




இந்த மாதம் குடும்பத்தில் அன்பும் அரவணைப்பும் இருக்கும். குடும்ப உறவுகளிடம் நல்லிணக்கம் காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே அன்யோன்யம் கூடும்.

இந்த மாதம் உங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். சுய தொழில் செய்பவர்கள் தங்கள் தொழிலை விரிவுபடுத்த பணத்தை முதலீடு செய்வீர்கள்.


இந்த மாதம் உத்தியோகத்தில் ஏற்றம் காணப்படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு நீடிக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெறுவீர்கள்.

இந்த மாதம் சுய தொழிலில் சிறிது முன்னேற்றம் காணப்படும். வெளிநாட்டுத் தொடர்புடைய தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக லாபத்தை காண்பார்கள். கூட்டுத் தொழிலில் மந்த நிலை காணப்படும்.

இந்த மாதம் அதிக பணிச் சுமைகள் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். உடல் வலி மற்றும் கண் வலி போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். கல்வித்துறை சார்ந்த வல்லுனர்களின் வழிகாட்டுதலைப் பெறுவார்கள். உயர்கல்வி பயிலும் மாணவர்கள் படிப்பில் வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
3, 8, 9, 10, 23, 27.
**அசுப நாட்கள்:**
6, 7, 14, 15, 16, 18, 24.




காதல் உறவில் உள்ளவர்களுக்கு சிறிய விஷயங்களுக்கெல்லாம் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். எனவே காதல் துணையிடத்தில் வாக்கு வாதங்களை மேற்கொள்ளாமலிருப்பது நன்மை பயக்கும். திருமணமான தம்பதிகள் தங்கள் கடந்த கால வேறுபாடுகளை மறந்து புதிய வாழ்க்கை தொடங்க உன்னதமான மாதம் ஆகும்.

இந்த மாதம் பணப் புழக்கம் நன்றாக இருக்கும். தொழிலில் தன வருவாய் கணிசமாக உயரும். பளைய கடன்கள் எல்லாம் அடைபடும். உத்தியோகம் செய்யும் இடத்தில் சில போட்டிகள் காணப்படும்.

சுயதொழில் செய்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் என்றாலும் வயிறு மற்றும் சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் உபாதைகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. உணவு கட்டுப்பாடு விசையத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும். பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.

சுப நாட்கள்:
3, 8, 9, 10, 23, 27.
அசுப நாட்கள்:
6, 7, 16, 17, 18, 20, 24, 25.




இந்த மாதம் உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் சுமூகமான உறவு நீடிக்கும். திருமணமானவர்கள் தனது துணையின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கணிசமான லாபம் கிடைக்கும். மருத்துவத் துறை மற்றும் மருத்துவம் சார்ந்த துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் இந்த மாதம் பணியில் சில முன்னேற்றங்களைக் காண்பீர்கள். இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக வெளிநாடு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு இது சிறந்த பலன்களை அளிக்கும் மாதம் ஆகும்.

தொழில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழில் செய்பவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உண்டாகும். வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளிக் கல்வி மாணவர்கள் தேர்வுகளை சிறப்பாக எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். உயர்கல்வியில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு படிப்பு முடித்தவுடன் வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

சுப நாட்கள்:
1, 2, 8, 9, 10, 12, 13, 26, 27.
அசுப நாட்கள்:
3, 6, 7, 14, 15, 16, 17, 18, 19, 20, 24, 25, 29, 30.



# சிம்மம்

குடும்பத்தில் உள்ளவர்களிடம் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும். இந்த மாதம் பொருளாதார நிலையைப் பொறுத்தவரை ஏற்றம் மிகுந்ததாக இருக்கும். உங்கள் பொருளாதார நிலை ஏற்றத்துடன் இருக்கும். பதவி உயர்வு காரணமாக உங்கள் வருமானம் உயரும். உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் உங்கள் வருமானம் இருக்கும். கையில் பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். வெளிநாட்டு தொழில் முதலீடுகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்.

உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் தைரியமான செயல்பாடுகள் உடன் பணிபுரிபவர்களின் பாராட்டைப் பெறும். சொந்தத் தொழில் செய்பவர்கள் தங்கள் தொழிலில் பிரகாசிப்பார்கள். புதிய தொழில் ஒப்பந்தங்கள் மூலமாக புதிய வாடிக்கையாளர்களைப் பெறும் வாய்ப்புகள் ஏற்படும். தொழில் மூலம் லாபமும் பெறுவீர்கள். அதிக பணி சுமை காரணமாக மனப் பதட்டம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. மருத்துவ சிகிச்சை மற்றும் அதற்கான செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

பள்ளிப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு பொழுதுபோக்கில் மனம் ஈடுபடும். படிப்பில் அதிக கவனம் செலுத்தி படித்தால் படிப்பில் வெற்றிபெற முடியும்.

**சுப நாட்கள்:**
3, 8, 9, 10, 16, 27.
**அசுப நாட்கள்:**
6, 7, 20, 21, 22, 23 24.



# கன்னி

இந்த மாதம் உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் சுமூகமான உறவு நீடிக்கும். திருமணமானவர்கள் தனது துணையின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கணிசமான லாபம் கிடைக்கும். மருத்துவத் துறை மற்றும் மருத்துவம் சார்ந்த துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் இந்த மாதம் பணியில் சில முன்னேற்றங்களைக் காண்பீர்கள். இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக வெளிநாடு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு இது சிறந்த பலன்களை அளிக்கும் மாதம் ஆகும்.

தொழில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழில் செய்பவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உண்டாகும். வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளிக் கல்வி மாணவர்கள் தேர்வுகளை சிறப்பாக எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். உயர்கல்வியில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு படிப்பு முடித்தவுடன் வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

**சுப நாட்கள்:**
1, 2, 8, 9, 10, 12, 13, 26, 27.
**அசுப நாட்கள்:**
3, 6, 7, 14, 15, 16, 17, 18, 19, 20, 24, 25, 29, 30.




திருமணமான அன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும். குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள், விருந்து மற்றும் விசேஷங்கள் நடக்கும்.

செலவை கட்டுபடுத்துங்கள். பட்ஜெட் அமைத்து செலவுகளை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.
பணியிடத்தில் பதவி உயர்வு கிட்டும். அதன் மூலம் உங்கள் வருமானம் உயரும். வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.
இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும். தொழிலில் வெற்றி காண அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இருக்கும்.

இந்த மாதம் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் இல்லாவிட்டாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும்.
பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள். உயர்கல்வி பயிலும் மாணவர்கள் இந்த மாதம் கல்வி சிறந்த வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
1, 2, 8, 9, 10, 12, 16.
**அசுப நாட்கள்:**
6, 7, 14, 15, 23, 24, 25, 26, 27, 28, 29, 30.




திருமணமான தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து உண்மையாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவு நீடிக்கும். வீட்டில் உள்ள பெரியவர்களின் உடல் நலனில் அக்கறை தேவை.

சென்ற மாதத்தை விட இந்த மாதம் பண வரவு சற்று அதிகமாக இருக்கும். புதிய நிலம் மற்றும் புதிய வண்டி வாங்கும் வாய்ப்புகள் உறுவாகும். பங்கு வர்த்தகத்தில் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். புதிய முதலீடுகளை தவிப்பது நலம்.
பணியில் சில முன்னேற்றங்களைக் காண்பீர்கள். பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்கள் நட்புணர்வுடன் பழகுவார்கள்.

இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக வெளிநாடு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு இது சிறந்த பலன்களை அளிக்கும். கூட்டுத்தொழில் சம்மந்தப்பட்ட புதிய தொழில் முதலீடுகளை தவிர்ப்பது நல்லது.

இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சவால் மிக்கதாக இருக்கும். சிறு சிறு உடல் உபாதைகள் வந்து போகும்.
பள்ளிக்கல்வி படிக்கும் மாணவர்கள் மனதில் இந்த மாதம் தன்னம்பிக்கை நிறைந்து இருக்கும். வெளி நாடு சென்று உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தங்கள் விருப்பம் நிறைவேறக் காண்பார்கள். என்றாலும் கவனமுடன் படித்தால் எளிதில் வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
01, 02, 08, 09, 10, 13, 16, 17, 26, 27.
**அசுப நாட்கள்:**
04, 12, 18, 24, 25, 28, 29, 30.




கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகாரிக்கும். தாம்பத்திய உறவில் நல்லிணக்கம் கூடும். உறவினர்கள் அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும்.
தொழில் செய்பவர்கள் வெளிநாடு மற்றும் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மூலம் வருமானத்தை பெறுவீர்கள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். இந்த மாதம் நிலம் அல்லது சொத்து வாங்கும் யோகம் உண்டு.
உத்தியோகத்தில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். வேலை பளுவால் மனச்சோர்வு ஏற்டலாம்.

சுயதொழில் செய்பவர்கள் ஒரே தொழிலில் முதலீடு செய்வதை விட பிரித்து முதலீடு செய்வதன் மூலம் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம்.
உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்கனைகள் வரலாம்.
மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் பளிச்சிடுவார்கள். சிலருக்கு கல்வி உதவிப் பணம் கிடைக்கும். இந்த மாதம் மாணவர்களுக்கு நம்பிக்கை தரும் மாதமாக இருக்கும்.

**சுப நாட்கள்:**
01, 02, 08, 09, 10, 16, 26, 27.
**அசுப நாட்கள்:**
03, 04, 05, 06, 07, 12 24, 25.




திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். வீட்டில் உள்ள பெரியவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும்.
சட்டம், மருத்துவத் தொழில் மற்றும் தகவல் தொடர்புத் துறையில் இருப்பவர்களின் தன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தரகு வியாபாரம் செய்பவர்கள் சிறந்த லாபம் காண்பார்கள்.
தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

தொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. சுயதொழிலில் சாதகமான விஷயங்களை எதிர்பார்க்கலாம்.
இளம் வயதினரின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மத்திம வயதில் இருப்பவர்கள் உடல் வலி மற்றும் மூட்டு வலி போன்ற உபாதைகளை சந்திக்க நேரும். சிறிய அளவிலான உபாதைகள் என்றாலும் உடனடியாக மருத்துவரை நாடுவது நல்லது.
பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்கள் படிப்பில் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி காண முடியும். அறிவியலில் ஆராய்ச்சி கல்வி படிக்கும் மாணவர்கள் தங்களது ஆராய்ச்சியில் வெற்றி பெற்று படிப்பில் முதன்மை பெறுவார்கள்.

**சுப நாட்கள்:**
01, 02, 09, 12, 26, 27.
**அசுப நாட்கள்:**
05, 06, 07, 12 24, 25.




திருமணமான தம்பதிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இடையே நல்லுறவு நீடிக்கும். இளைய சகோதரர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம்.

இந்த மாதம் பழைய முதலீடுகள் மூலமும் முதிர்வு பெற்ற காபீட்டுத் தொகை மூலமாகவும் தங்களின் பொருளாதார நிலை உயரும். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். சுயதொழிலுக்காக கடன் வாங்க காத்திருப்பவர்களுக்கு புதிய நண்பர்கள் மூலம் தன உதவி கிடைக்கும்.

இந்த மாதம் வேலை பளு கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புகள் உண்டு.
தொழிலில் பெயரும் புகழும் பெறுவீர்கள். தொழில் தொடர்பான பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும். கமிஷன் தொடர்பான தொழில் செய்பவர்களுக்கு அதிக லாபம் கிடைக்க வாய்ப்புகள் உண்டு. கூட்டுத் தொழில் இந்த மாதம்

வயிறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட உடல் பாதிப்புகள் ஏற்படலாம்.
பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். உயர்கல்வி பயிலும் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள்.

**சுப நாட்கள்:**
01, 02, 03, 13, 16, 17, 26, 27.
**அசுப நாட்கள்:**
06, 07, 08, 09, 10, 12, 14, 15, 24, 25,29, 30.




கணவன் மனைவிக்கு இடையே தாம்பத்திய உறவில் நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளது.

மின்னணு சம்மந்தப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கணிசமான வருமானம் காண்பார்கள். நிதித்துறை, தகவல் தொடர்புத்துறை மற்றும் உணவுத்துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தை பொருத்தவரையில் ஏற்றம் நிறைந்து காணப்படும்.
உத்தியோகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருக்கும். உங்களுக்கு வேலை செய்யும் இடத்தில் அங்கீகாரம் கிடைக்கும். அரசுத் துறையில் பணி புரிபவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும்.

இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக பிரயாணம் மற்றும் உணவு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு நல்ல லாபத்தை அளிக்கும் மாதமாக இருக்கும். மென்பொருள் தொழிலில் உள்ளவர்கள் நல்ல ஏற்றத்தை காண்பார்கள்.
இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சவால் மிக்கதாக இருக்கும். சிறு உடல் உபாதைகள் வந்து போகும். அலட்சியப்படுத்தாமல் மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறப்பு.

பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆதரவைப் பெறுவார்கள். சிறப்பாக கல்வி பயின்று வெற்றி காண்பார்கள். படித்து முடித்து வேலை தேடும் மாணவர்கள் சிறந்த சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கப் பெறுவார்கள்.

**சுப நாட்கள்:**
01, 02, 03, 09, 26, 27, 30.
**அசுப நாட்கள்:**
06, 07, 10, 11, 12, 14, 15, 24, 25.